ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

டிவழகியநம்பிதாஸர்

இயற்றிய

# பெரியாழ்வார் பிரபந்தம்.

குப்பியம்

ஸ்ரீமாந் திருநாராயணபிள்ளையவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

பண்டிதர், **P. R.** கிருஷ்ணமாசாரியரால்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

கல்யாணசுந்தரம் முத்திராசாலை.

1908

*(Copy Right)*

# பெரியாழ்வார் பிரபந்தம்.

பொய்கை பூதம் பேயென்னப் புகல வரிய முதலாழ்வார்
செய்ய கமலத் திருவடிக டிருந்த விறைஞ்சித் திருவருளான்
மெய்கொள் புதுவை நகர்வந்த விட்டுணு சித்தன் கதைவிரிவை
யையைம் புலனு லலைப்புண்ணு மடியே னறிந்த படியறைவேன்

## வேறு.

2 விண்ணாட்டு ளந்தாம வியன்புரிசை வேந்தனுக்கு
மண்ணாட்டு ளான்மாவாந் தவசமருள் வழிநடத்தி
யெண்ணாட்டு மூவர்களு மேகியபின் னிருநிலத்தின்
கண்ணாட்டி நீங்காத களப்புலனாய்க் குறும்புசெயும்.

3 வேடர்களோ டைவர்களு மேதினியின் மிக்கவிருட்
காடுமலை யன்றிவெளி யேயிடமாய்க் கலித்திலங்கு
நாடுமதின் கீழாய நற்பதியு நசிப்பித்து
மூடவிலங் கவைசாத்தி முடித்தனர்கள் புவிமுழுதும்.

4 அத்திறத்தாற் புவிமுழுது மல்லலுறும் படிகண்டு
மெய்த்திறத்தான் மெய்வீட்டில் வீற்றிருந்தே யுலகாள்
பொய்த்திறத்தார் புலைச்சர்ப்பம் பொடியாகக் கருடனை
சித்திரத்தாற் பெரியாழ்வா ராயுலகைத் திருத்தென்றான்

5 என்றிறைவ னருள்புரிய விறையருளுந் திருவருளு
மொன்றியசீ ரன்பினு லுடன்கொண்டு புவியிலிறை
சென்றுதுயில் கொண்டவருட் சிறந்தவில்லி புத்தூரி
னின்றிதரும் வேதியரிற் சோழியரென் றேநவிலும்.

6 குலத்தினெறி யுடைமுகுந்தர் தந்தையாய்க் கோதில்வா
நலத்தினார் தேவியார் பற்புமைநற் றாயாராய்
நிலத்தினிருள் கெடத்தோன்று மருக்கனென நிலவுமுயிர்
புலக்கூடா நிசியொழிக்கும் போதமாக் கதிரவனாய்.

7 ஆனியெனுந் திங்களினில் வளர்பிறையி லருஞ்சோ
மேனியனார் சோதியினில் விண்ணவர்பூ மழைசொரிய
வானில்வரு முகிலொலியு மறையொலியு மாறுசெயப்
பானிலா முகத்தியர்கள் பல்லாண்டி னிசைபாட.

8 அறந்தழைப்ப மெய்ஞ்ஞானம் யாவர்களு மறிந்துய்ய
மறந்தீய வேரோடு மடியவஞ்சம் பாழாக
திறந்திறம்பா துயர்ந்தோங்கத் தீவினைக ளுலைந்தோட
வுறங்கினு னுபேடா வீனுதே யுயிர்நோக்க.

# பெரியாழ்வார் பிரபந்தம்.

9 திருவவதா ரஞ்செய்தார் செகமுழுது மீடேற
மருவமரும் பொழிற்புதுவை வடபெருங்கோ யிலானன்
தருகுழவி தனைநோக்கிச் சதஞ்சீவ வெனவாழ்த்திப்
பொருவவருக் கவரேயாய்ப் புவிமீதில் வளர்ந்திடுநாள்.

10 பூதமுத லாயகன்சீர்ப் பூங்கழற்கீழ்ப் பசுந்துளவா
லேதமிலாப் பூமாலை பாமாலை யெனுமிரண்டு
மாதரவி னாற்கட்டி யருளவல்ல வாழ்வார்க்கு
வேதநெறி விட்ணுசித்த னெனுநாமம் வியந்துரைத்தார்.

தருக்காக்கு மிந்திரனுஞ் சதுமுகனுஞ் சராசரமு
மெருக்காக்குஞ் சடையானு மிறைஞ்சவெய்தா திடர்க்கரியை
யுருக்காக்கும் பெருமானை யுவந்துபல்லாண் டெனவோதித்
திருக்காப்பன் றிடுவார்க்குத் திருக்காப்புஞ் செய்தனரால்.

வேறு.

பூதத்தனி நாயக னையலையார் புனலுட்டியி லும்புயன் மேனியினை
வேதத்தனி நாயக னேயெனவான் விடையாரய னோர்விண் ணோர்கோமா
னோதிக்கவை வாழ்த்தி யானெறியா னுலகிற்றமர் கட்குத வுந்திருமால்
பாதக்கம லங்கா ணீரென்றார் பாதக்கம லங்கண் டார்பலரும்.

வேறு.

ஒத்தவரு மிக்கவரு மன்றியொளி ரும்பன் னேதமறை யேழுமுல கேழுமலை யேழு
மித்திறமு லாதுபிறி தில்லையென வொல்லை யின்பமுறு மீரடியி னுலகள வளந்தான்
முத்துநிரை யன்னநகை பத்திகள் விளங்கு மொய்ம்மலரி னும்மருது வாமுளரி யந்தாட்
பத்துவிர லுங்காண்மினென் றவர்பதத் திற்பத்துவிர லுந்தொழுது பத்தர்கள்பரிந்தார்.

வேறு.

14 வினைகளா றுமொடு மிக்கவி ரண்டை வேலனை யாமை யிடற்றுணைப்
பினைக்கா ரன்மறை யைப்பக லோரைப் பலவைக் கனிவா யுறைவண் டிறவோர்
துணைக்கா லாகக் கொண்டிலை மீதிற் றுயிலும் பெருமா டிருமா லழகார்
கணைக்கால் காண்மினெனக்கசி வோர்தங் கணைக்கால் கண்டு களித்தனரன்பர்.

வேறு.

15 பாரானு நூற்றுவரைப் பாழாக்கிப் பாண்டவருக்
கீராத வின்ப மருளப் பிறந்தபிரான்
சீரார் கருணைத் திருமுழந்தாள் காண்மினென்று
னேரார் முழந்தாள் யாவருங்கண் டின்புற்றார்.

16 வங்கக் கடற்றுயின்ற மாமான் மதுசூதன்
வெங்கட் களிறடர்த்தா னைவர்களை வெல்லுவித்த
செங்கமலக் கண்ணன் றிருக்குறங்கு காண்மினென்று
னங்கக் குறங்கை யனைவருங்கண் டாதரித்தார்.

# பெரியாழ்வார் பிரபந்தம்.

புனபுலத்தார் பாரம் புவிமடந்தை யாற்றரிதென்
றன்புறநின் றேத்த வவனியின்கட் போந்தபிரான்
மின்பொறுத்த சோதி விளங்குமுத்தங் காண்மினென்று
ணின்பமுறு முத்[illegible] யாவருங்கண் டின்புற்றார்.

வைய முழுதும் வயிற்றுள்வைத்துத் தேவகியா
ருய்ய வழகா ருதரத் துதித்தபிரான்
மையணிய சோதி மணிமருங்குல் காண்மினென்ற
வையன் மருங்கை யனைவருங்கண் டாதரித்தார்.

சத்தம் பரிசு முருவந் தனைக்கந்த
மொத்த குரம்பைதொறு மூட்டியென்னை யாட்டுவிக்கு
மத்தன் றிருவுந்தி யாயிழையீர் காண்மினென்ற
சித்தனெழி லுந்திகண்டு நீணிலத்தோர் வாழ்ந்தினார்.

கொல்லு மதவானைக் கோடுங் கொடியவிறன்
மல்லுந் தொலைப்ப வடமதுரை வந்துதித்த
செல்லுருவ மன்னன் றிருவுந்தங் காண்மினென்று
சொல்லும் பிரானுதரம் போற்றினார் தாயோரே.

1 சங்கக் குழையரன்கைச் சாபந் தவிர்த்திரைக்கும்
பொங்குகட லேழும் பொடிசெய்து வந்தபிரான்
செங்கமலை தங்குந் திருமார்பு காண்மினென்றான்
பங்கமில்லா மார்பழகு கண்டார் பரிவோடே.

வேறு.

2 பெருத்தோங்கு நூற்றுவர் மாளப் பிறந்த
குருத்தோங்கு நான்மறைக் கோவலர் குட்டன்
றிருத்தோ ளிருந்தவா காணென்றான் றோள்கள்
கருத்தோங்கு மன்பர்கள் கண்டார் களித்தே.

3 சூழவிசும் போடுமுன் றொல்லுல குண்டவ
னாழியுஞ் சங்கு மடங்கு கரங்களை
[illegible]யிழையார் [illegible]னின்க ளென்றவன் கைத்தலம்
[illegible]ாழிய மன் [illegible] கண்டு பணிந்தார்.

4 பெருக்கண் [illegible]டிப் பிறங்கிய பொன்னை
னுருக்கண்டங் கண்டே முலகுமுண் டான்றன்
றிருக்கண்டங் காணென்ற சேய்களுங் கண்டு
கருக்கண்டங் கண்டனர் கற்றறிந் தோரே.

5 முன்றொண்டை தண்டாமன் மூவுலகு முண்டவன்
செந்தொண்டை வாய்காண்மி னென்றபின் செப்ப
நன்றொண்டு [illegible]னை சகியாய்ப் பிறந்தவ
ரின்றொண்டை வாய்கண் டியாவர்க்கு மின்புற்று.

26 பூக்குந் திருவுந்திப் பூவை நிறத்தமலன்
வாக்கு நயனமும் வாயு முறுவலுஞ்சீர்
மூக்கு மிருந்தவா காணீரென் றுன்முகத்தி
லாக்கு மதுவதுகண் டந்தணர்கள் வாழ்த்தினர்.

27 திங்கள் வதனத் திருவனைய தேவகிபாற்
றங்கிப் பிறந்தாயர் தன்பால் வளர்ந்தபிரான்
செங்கமலக் கண்காண்மின் சேயிழையீ ரென்றவர்த
மங்கமலக் கண்கண் டனைவர்களும் வாழ்த்தினர்.

28 நெருப்புருவத் தான்சாப நீக்கிவரு நீலப்
பொருப்புருவங் கொண்டவிறை பூமகடன் கேள்வன்
றிருப்புருவங் காண்மினென்ற செல்வன் புருவத்
திருப்புருவங் கண்டாங் கிமையவரும் வாழ்த்தினர்.

29 ஆகரத் தனிச்சோதி யாயர்கள் கோமா
னுகரத்தி னுனை யுரத்திற் றரித்தான்
மகரக் குழையிரண்டுங் காண்மினென்ற வள்ளல்
பகர வரியகுழை பார்த்தமரர் வாழ்த்தினர்.

30 உற்ற புவன மனைத்துமுதிப் பித்ததனுட்
சிற்றிடைத் தேவகியார் சீரார் வயிற்றுதித்தா
னெற்றி யிருந்தவா நேரிழையீர் காண்மினென்று
னுற்றைப் பிறைநுதல்கண் டுத்தமர்கள் வாழ்த்தினர்.

31 ஆராயும் வேத மயர்வெய்த வண்டர்கையி
லோரா னுணகயிற்றாற் கட்டுண்ட வெம்பெருமான்
சீரார் குழல்காண்மி னென்றான் றிருக்குழல்கண்
டோரு முற்றுரு முண்மகிழ்வோ டாடினர்.

வேறு.

32 இவ்வணம் பாத மாதியாய்க் கேச மந்தமா யிலங்குமெய்ஞ் ஞான
மெய்வணக் குழவி யவையவச் சிறப்பை மேதினி யுள்ளவர் தமக்கு
மைவணத் திரைசேர் புதுவைமா நகரின் மறையவர் மகிழ்வொடு முரைப்பப்
பொய்வணத் துயரைக் கடிபவர் பலரும் புகுந்தனர் முகுந்தன தகத்தில்.

33 ஆணவந் திரண்டே ருருவெடுத் துலாவு மைம்புல வேடர்க ளணியாம்
பூணவம் பூண்டு பொய்ப்பரி மீதாய்ப் பூமியைப் பொடிசெய்வார் செயலைக்
காணவந் தவனைக் காணவந் தவர்க ளுடம்பெலாங் கண்ணிலா கையினு
னூணவா முறக்க மவம்பிறப் பவமென் றுளங்கசிந் துருகினைந் தொசிந்தார்.

ண்ணிரின் றிறைஞ்சிப் பாலனை நோக்கி யிரங்கினர் வாக்கினு லிசைப்பார் [முழுந்தோ
ண்ணியக் கொழுந்தோ நான்மறைக் கொழுந்தோ போதத்தின் பொலிசுடர்க் கொ
வண்ணனிய சாந்தி தருமெழிற் கொழுந்தோ விசைப்பதோர் கவையருட் கொழுந்தோ
ண்ணிய வமுதின் சுவைதிரண் டதுவோ வேதியர் தவந்திரண் டதுவோ.

நங்கைதாய் செய்த தவப்பயன் றானோ தந்தைதந் தூற்றமெய்ப் பொருளோ
பிந்தமா நிலத்தோர் செய்தவப் பயனோ விலங்குவா னவர்செய்த தவமோ
செந்நாண் மலரோன் வாசவ னக்கன் காண்பரும் பரஞ்சுட ரொளியைத்
தந்துநா முய்ய வந்ததோ ருருவோ வென்றென்று சாற்றிவாழ்த் தினரால்.

6 இப்படி படியிற் பாலனைக் கண்டார் யாவரு மிரங்கினின் றேத்த
மைப்படி கண்ணார் மாதர்கள் பலரும் மகப்பெறு பற்புமைத் திருவு
மெய்ப்படிந் திலங்கு குழவியோ டளாவி மிகுமனு பவவினை யாட்டு
கைப்படிந் திலங்கும் பருவமோர் பத்துங் கருமுகிற் குழைத்தவற் குழைத்த.

37 சீருடைக் குழவி யிணையடி யாதி திருமுடி வரையினி லணியா
மேருடைச் சதங்கை சுட்டிமற் றிதனுக் கிடையிடை பூண்பன கமலத்
தாருட னணிந்து வளருநா ளொருநாட் டையலார் தற்பரா வமுதைக்
கூரிய தவத்தோர் செவிப்புல னிறைப்பீர் கொள்ளுமி னமுதெனக் கொடுத்தார்.

38 இன்னமு தருந்திச் சவுளநான் மறைக ளிசைத்தவர் செய்துமுப் புரிநூ
றன்னையு மந்நா லறைந்தவப் படியே தரித்துமா னுரிமுஞ்சி தரித்து
மன்னிய பிரம சாரியாய்ப் புவியில் வாழுநாண் முழுவதும் வாழ்வா
ரன்னம தூர்தி தாதையா ரடிமை யாகுநா மென்பதை யறிந்தார்.

39 அத்திற மறிந்து வடபெருங் கோயி லுடையவ ரடியிணை வணங்கி
யெத்திறஞ் செய்தா லிவருள மகிழு மெனவிறை திருவவ தார
மெய்த்திறத் தாறின் மூன்றினிற் கஞ்சன் விறல்கெடப் பிறந்தவர் தமக்குச்
சித்திர மாலா காரர்தம் பூவிற் றிருவுள மகிழ்தல்சிந் தித்தார்.

40 அதுவலா லடிமைத் திறத்திதனுக் குரிமை யிலதென வகத்திறைட் டெனி
மதுமலர்த் துளதி மல்லிகை யலரி சண்பகம் வளர்மதுப் பிச்சி
புதுமதுப் பொங்கி வளர்கழு நீர்கள் செவ்வந்தி புகரறு கமல
மிதுவது வென்று திறைவனுர் சாத்தற் கிசைவன நறுமலர் யாவும்.

41 ஆக்கிடு நந்த வனங்கள்பற் பலவு மணிதிகழ் பொய்கைகள் பலவு
மாக்கிமற் றதனு ளலர்மலர் போக்கி யரும்புவிட் டப்பொழு தலரும்
பூக்களைத் தெரிந்து புழுக்கடி போக்கிப் பொய்யிலா மெய்யனுர் புனைதீர்
மூக்கில் [illegible] சென் றணைந்திடா வண்ண மூடிவாய் புனைந்துமுக்குணத்தில்.

42 அன்பகல [illegible] துடைத்துமெய்ஞ் ஞானச் சுடர்தரு சாத்திகத் துணைவா
லன்பனுர் திருப்பூக் கூடையின் முன்ன மறைந்தசீர் நறுமல ரமைத்து
முன்பினுர் கூடை யிரண்டொரு கோலின் முறையினுற் கோத்ததை காவி
யென்பெலா முருக வானந்த வாரி யிருகணு லிடையறு தொழுக.

43 பங்கய வடிபோர்த் திடுந்தொறு மதனுட் பட்டபுற் பசுமைகொண் டோங்கப்
பொங்கிய சாமு மசாமு முருகப் பூமகண் மனமொடு வாக்கு
மங்கமுங் குழைய நடந்தவர் கிடந்த வச்சுதன் வடபெருங் கோயி
றங்கிய திருமா றிருவுள மூவப் [illegible]மலர்க் கார்பவ கனைமக்கே.

# பெரியாழ்வார் பிரபந்தம்.

பகலொரு சாமங் கழித்தபின் னொளிக்கொள் பரஞ்சுடர் வடபெருங் கோயிற்
புகலருங் கருணை யிறைவனை வணங்கிப் பூமலர்க் காவினிற் புகுந்தே
யகலம துடைத்தாய் நொய்யதாய்க் கைசேர்ந் தழகுறு கொட்டவ ணெடுத்து
சகலரு மிரங்க விருநிலங் குடைந்து தட்டற நிரந்தியத் தலத்தில்.

வேறு.

மருவேரு மல்லிகையுஞ் சண்பகமும் வளர்துளவு
மிருவேலி தருகவிரு மிலாமிச்சி னெழின்மூடுங்
கருவேலை யறுத்தபிரான் கயிங்கரிய முதிர்ச்சிதருந்
திருவேர்வி லாணக்கக் கண்ணீரிற் சேறுசெய்தே.

வைத்தூகன்னீ குறப்பாய்ச்சி மாயனிடை மடைமாறுப்
பத்தியினோர் மடைமாற்றிப் பகற்பொழுதைக் கழித்தகற்பி
னெய்த்தகுறு மலர்க்கிந் திருமாலை நேயத்தாற்
பைத்துபாம் பணைக்கிடந்த பரமனுக்குச் சமைத்தளித்தே.

மங்குறோய் மணிமாட வடபெருங்கோ யிலர்தமக்குப்
பொங்குமதுப் பொழிற் காவிற் புகுந்துபணி செய்வதற்குக்
கங்குலெனத் தடைசெய்த கயிங்கரிய விரோதியையொர்
தங்காரிடிந் திருத்தாழ்வா ருணைவதைய யத்தெழுந்தே.

நீராடிக் கற்பனையா னியமத்தின் குறைமுடித்துங்
கூராழி சங்கங்கைக் கொண்டபிரான் றனைவணங்கிப்
பாரோருவ் விண்ணோரும் பணிந்தேத்தப் பசுந்துளபக் வ
தாரேறு மெழிற்கூடை தாங்கிநந்த வனஞ்சார்ந்தும்.

வேறு.

சிலபகல் கடத்தி னோச் செயல்கண்டு புதுவை மன்னும்
புலவர்க ளிவரை வாழ்த்திப் பூங்கழ லிறைஞ்ச வன்னோர்
மலமறத் திரைக்காட் செய்யு மதியளித் தவர்பான் மாறு
நலமரு வாழி சங்க நற்பொறி நல்கி யாண்டார்.

எருடைத் தொண்ட ரோடிலங்கைசெற் றவர்க்கு
தாருடன் சமைத்து மாயன் றளிணை வணங்கு நாளிற்
பார்முழு தாளு நீதிப் பாண்டியர் குலத்திற் கொண்டு
சீர்பெற வவனி காத்து சீவல தேவ னென்றோர்.

தென்னவன் மதுரை மன்னிச் சிறந்தர சாளு நாளின்
மன்னுமந் நகரி லுள்ள மாந்தர்கட் கரசா லெய்து
ன்னலுமந்தமுங் காண வேண்டுமென் றிராக்கா லத்துப்
பொன்னகர் வீதி யெங்கு மொருவனாய்ப் போய்மீள் போதி

52 துருநகர் காவ லாளர் செழுமணிப் பாரி போட்டு
வருபவ ரெதிரே மன்னன் மன்னவன் மறைந்தோர் தீதி
யருமறை யந்த ணாளன் றிணையோயான் மறைய வாய்மே
யொருவனோர் மூசச னாகி யுறங்குவா ... ரிர்ப்பாக கோட்டான

53 கட்டமெய் நீதி மன்னன் கிளரொலிப் பாரிக் காரர்
கூட்டமவ் வீதி நீங்கக் குவலையத் தாருக்கு மைந்தர்
பூட்டியு வுடைவா ளோடும் புகுந்தந்தி லாருக்கு கின்றான்
மாட்டணைந் திருந்தா ரோர்கொ லிவனென மனத்தி லெண்ண

54 இருந்தமன் கிடந்தான் றன்னை யெழுப்பினீ யாவ னென்று
திருந்துறின் னுணையார் கூறத் திணையணயிற் றுயில்கொள் வே
வருந்துயில் யாவு நீங்கி மறையவ னுகு நானென்
றருந்தவன் கூற மன்ன னவனுக் மறைவ தாகுன்.

55 வேதியர் குலத்து ளீரோல் வெறுமையுற் றிவண்ண நுஞ்சு
நீதியே தறைக வென்றான் மன்னவ னெறிசென் றேந்து
மூதிய மறிந்த பார்ப்பா னுரைப்பதென் கதைகை யாடி
யாதியெம் பிரமசேது வாடொ னணைந்தே தனையா

56 என்றவ னுவை ப்பக கேட்டா திருவெல முழுது மாளும்
வென்றிவேல் வேந்த னந்த வேதியன் றன்னை நோக்கி
நன்றிசேர் கதைகள் போமே னவில்கவென் றுரையப் பாரா
னென்றுநா னறியே னையா வளதொரு கிரந்த மென்றான்.

57 அங்கதை யருளு வீரென் றரசனு முவாந்து கூற
வோர் குசி ரந்த ணாளனு மந்த னுவமை ப்ப மையா
நாங்கிய மன்னர் மன்னன் சாற்றுவீர் பயனை யென்றான்
மூங்கரு மறியும் வண்ண மொழிந்தனன் ... சொல்வி

58 மாரியின் காலந் துய்ப்பான் மறுநாள காலத் திட்டு
கூரிய விருளிற் றுய்ப்பான் கொழுந்தடாப் பகலி லீட்டுத்
சீரிய விளமை தன்னின் மூப்புக்குஞ் சிறப்பா யீட்டு
மேரியல் பத்தை லிம்மை தன்னிலே மறுமைக ளட்டுமா.

என்றவ ... யன கேட்டா கிரங்கினை துருகி யாக்
வன்பனை யட்டன்சொன் னடங்கி யளவறு ... நிக
புன்புல னற்றே யகென் றவுப்பியப் போழுதி ...
தன்பெரும் கோயில் புக்கான் றடமலர் வாயில் ... மான்.

வே று.

60 வந்துமனை பு ... எவர்கள மன்ன
னந்தம னுவமை த்தபொரு ளாய்வுறுமெய் நூலின்
மூந்தகரு மொன்றுட னிலைகுமுடி லெய்து
... பொய்யமென வேண்ணம்.

61 இருந்தன னிருந்துழி யிருட்பொழுது மாயா
வருந்துயரு மாயவெழி லாதவ னெழுந்தான்
றிருந்துநிய மத்தொழில்கள் செய்துமறை வாழ்வை
தருந்தவர்கள் கொள்வபல தானமு மளித்தே.

62 அண்டமுக டேருவி யாசற நிமிர்ந்த
மண்டலவி லங்குமணி வாயிலுற மன்ன
னெண்டரு திசைப்புவியின் மன்னவ ரிறைஞ்சத்
தண்டரள மார்பனுயர் தானையர் வணங்க.

63 எய்தியரி யாசனம தெய்தியிட நற்ற
வைதிகர்க ளாசியொடு மன்னவெழின் மன்ன
னுய்திற மறிந்திடு முபாயமவை யெண்ணிச்
செய்திற மறந்துவளர் தென்னவ னிருந்தான்.

வேறு.

64 பூங்கமுகற்கால் விறற்றென்னன் புக்கிருக்கு மவையின்க
ணோங்கவற்குப் புரோகிதனு முச்சுதன்சீ ரருள்வடிவைத்
தாங்குமெழின் மனத்தினனாய்த் தத்துவனைப் பிரியாதே
யோங்குமடி யவராலும் பழவடியா னெனுமுறையில்.

65 உற்றவனாய்த் தென்னவனுக் குயிர்த்துணையா யறமன்றி
மற்றறியா நிலையானாய் மறைநாலுங் கற்றவனாய்ச்
செற்றமிலா மனத்தினனாய்ச் செல்வநம்பி யெனுநாமம்
பெற்றவனா யெதுவரினும் பேராத நிலையானாய்.

66 உளதொருவ னவன்வந்திட் டோங்கியசீர்த் தென்னவன்முன்
னளவிறந்த மகிழ்ச்சியொடு மிணைந்தருகோ ராசனத்திற்
றளவநெடு மணிமுடிமா றேத்திரம்வாக் கேத்தவஞ்சா
வளவனுக்குஞ் சேரனுக்கு மன்னவவாழ் கெனவிருந்தான்.

67 பொய்மையற்ற மறையோனைப் பூபால னுறநோக்கி
மைமையெனும் புலைச்சமைய மயக்கிடையிற் படாதழிய
விம்மையிலே மறுமைதனக் கியற்றுவதெப் படியென்று
மெய்ம்மையைநா னடையுநெறி செல்வநம்பி விளம்புகென்றான்.

வேறு.

68 முத்திசித் திக்கு மாறு மொழிகென மன்னன் கூறு
முத்திரு மொழிகேட் டுள்ளத் தந்தண னன்பு கூர்ந்து
தத்துவ மறிய வேண்டு மன்னவர் தலைவ வென்றான்
மெய்த்திற மருள்வார் யாரென் றரசனவ் வியனைக் கேட்டான்.

படிமுழு தாளுஞ் செல்வம் பின்னுனிப் பனியென் றெண்ணி
முடிவிலாப் பேரா னந்த முத்திநீ விரும்ப லாலே
விடிவிலா மாயா கங்குல் விடியும்வீ டெய்தக் காட்டு
மடிகள்வே தாந்தம் ே ொ ருள்வர்நீ யஞ்ச லென்றான்.

70 வேதிய னஞ்ச லென்ற மெய்ம்மொழி விளக்கங் கேட்டுப்
பூதல முழுது மாளும் புண்ணியன் மகிழ்ச்சி தாங்கி
யோதுமெய் வேத வாண ருறைவதெத் தலத்தி லன்னோர்
பாததா மரைகளுண்போய்ப் பணிவனீ பகர்வா யென்ன

71 மன்னவர் பெருமான் கூற மாசறு செல்வ நம்பி
யென்னுமம் மெய்ம்மை யாள னியம்புவா னிலங்கு நீதித்
தென்னவ பூமி யெங்குந் திரிந்துநாங் காண்போ மென்று
லன்னவர் வெளிவா ராரோ ருபாயமிட் டழைப்போ மென்று

72 சென்றுநாந் தேடி யாடுந் தீர்த்தநின் னன்பி னாலே
யின்றெனி லாடி யுய்யென் றெனக்குமீண் டெய்து மாகி
லொன்றதி னுறுதி யுண்டோ வுரைத்தியவ் வுபாய மென்று
னன்றுகே ளென்று செல்வ நம்பியு நவில லுற்றான்.

73 ஆதியம் பரமன் மாயா விநோதத்தா லனந்த கோடி
நீதிகொள் சமைய மாக்கி நின்றன னதிற்று ளொன்று
யோதிய சமையத் துள்ளோ ரொன்றையொன் றுரல்வா தெ
வேதமு மவணுஞ் சொல்ல விதித்தவம் மெய்ம்மை யாளன்.

74 அத்திரு வேத நீதிச் சிரத்தினி லமரு மந்த
மெய்த்தவ னிலையைத் தாங்கும் வேதமு மறிய மாட்ட
வுத்தம குணத்தி னுனே யோங்கிய பரம சோதிச்
சித் ருள்பெற் றோருங் திறத்தினர் தெளியக் காண்பார்.

75 அதுவலாற் சமையத் தோர்க ளவனருட் சமையந் தன்னை
யிதுவது வாகு மென்றே யெடுத்தெடுத் தியம்பா நிற்பர்
பொ காவென்பர் சிலர்க ளந்தப் பொய்ம்மையைத் தெரிக்க ம
ாற் றோன்றி யுறையுமம் மணியோ டொத்

76 அன்றது காண வேண்டி லறைதரு வழிநே ராக்கி
நன்றுநீ திரண்டுங் காணு நன்மையர் தன்மை போல
வின்றுநாம் பரத்தின் மேன்மை யிதுவென வறிய வேண்டி
லொன்றிய மறையோ ராகி யுரைத்தபல் சமையத் தோரும்.

77 வருகவென் றழைத்து நின்பொன் வாயிலிற் கிழியைத் தூக்கி
யருமறை முடிவில் வைகு மாதியம் பரமீ தென்னப்
பொருவறு முறையால் வென்ற புண்ணியர் கொள்க வென்று
லொருவரே யறுப்பர் வேண்டா லெனினுமவ் வுண்மை காட்

78 ஆதலா னினக்கு நீஞ்சீ ரவனியோர் தீமக்கு மன்னு
வோதுமிப் பரமீ தென்ன வுணர்ந்ததை யடைத லாகு
மாதவத் தோரும் வாழ்வ ரென்றனன் மறைவ லாளன்
பூதலத் திறைவ னேலை புரையறு பூமி யெங்கும்.

79 ஒன்றுகற் றோர்க ளாதி யோங்குநான் மறையு மோதிச்
சென்றதின் முடிவு கண்ட சின்மயத் தோர்க ளந்தம்
பொன்றலின் முத்தி நீதி புகலவல் லார்க ளெல்லா
நன்றிசேர் மதுரை நண்ணி நவிலுநுங் கடவுண் மேன்மை.

80 இதுவென வருளி யென்னை யிலங்குநுங் கடவு ளார்த
மதுமலர்க் கமல பாத மன்னவைத் தென்னுற் கட்டும்
பொதுவுறு கிழியுங் கொண்டு புகழ்கொண்டு போவா னின்றே
கதுமெனப் புகுவீ ரென்னும் வாசகங் கழறி விட்டான்.

81 தூதுவர் கையி னீதி தொடர்ந்தவா சகங்கொ ளோலை
மாதிர மெட்டு முட்ட மன்னவன் விடுத்த பின்னைப்
பூதல முழுதுங் காணும் பொற்கிழி பொருந்தச் சேர்த்துக்
கோதறு நெறியான் மன்னுங் கோமுனை வாயி றன்னில்.

82 கட்டினுன் றூத ரோலை காசினி யுள்ளோர்க் கெல்லா
மிட்டனர் தவத்து ளோரும் யாவரு மறிந்தா ரன்றே
வட்டமா மேரு வொத்த மணிமதிண் மதுரை தன்னி
லுட்டெளி வுடையா ரெல்லாந் தூதுவ ருடனே சென்றார்.

வேறு.

83 சித்தர் புகுந்தார் தேவர் மகிழ்ந்தா
ரத்திரம் வாழ்வெனு மந்தணர் வந்தா
புத்த ரடைந்தார் சைவர் புகுந்தார்
மத்த முறும்மீ மாங்கிசர் வந்தார்.

84 மாயா வாதியர் வந்துபு குந்தா
ரோயா தேமது வுண்டு தமைத்;
ஞயா வாமிக ளக்கணம் வந்தா
தேயா வஞ்சவை சேடியர் சென்றார்.

85 ஆசறு சாங்கிய யோக ரணைந்தார்
பாசுப தத்தவ ரும்பதி யுற்றார்
மாசில ஞமெனு மாவிர தத்தார்
தே... றும்படி கூடல்செ றிந்தார்.

வேறு.

ஆருயிர் கொல்லோ மென்னு மருகரு மதுரை சார்ந்தார்
தேருமெய் யன்பில் காளா முகவருஞ் சென்று சேர்ந்தார்
பாருறு மீன்ப மல்லாற் பரமெனல் பழுதா மென்றே
யோகுல காய தத்தோ ரெனும்வ ருடனே சென்றார்.

87 நல்லியற் கூட றன்னி லிவரிவர் நண்ணு நாளில்
வில்லிபுத் தூரின் மாயன் விட்டுணு சித்த னென்பா
னெல்லியம் பொழுதிற் றுஞ்சு மிடத்தினி லொருநா ளெய்தி
பல்லியங் கண்ணு னோக்கி யருளளித் தன்பன் மாட்டில்.

௮௮ இருந்தவர் திருப்பேர் சொல்லி யெழுப்பினா ரெழுப்புங் காலை
யருந்தவ முடையார் துண்ணென் றெழுந்திருந் தருகி னோக்கக்
கருந்தட முகில்போன் மேனிக் கருணையங் கடலைக் கண்டார்
குருந்துறைந் தவனே போற்றி யெனக்குழைந் தடியில் வீழ்ந்தார்.

வேறு.

89 வையமுழு துண்டவர் பதங்களில் வணங்கி
நைவுறு மனத்தின ரெழுந்துநவை யில்லாக்
கைதலை குவித்தெழில்கொள் கண்கள்புனல் சிந்தச்
செய்திற மறந்துருகு சிந்தையரு நின்றார்.

90 நின்றநெறி யன்பனிலை கண்டுநிக ரில்லா
வொன்றுளது கேளென வுகந்திறை யுரைப்ப
மன்றல்கம ழுந்துளப மாலைபுனை மார்பா
வின்றறியும் வண்ணம தியம்பிடுக வென்றான்.

வேறு.

91 நன்னெறி மதுரை தன்னின் னாற்பெருந் திசையுங் காணத்
தென்னவன் விகாரத் தாலே திரண்டபொற் கிழியொன் றாக்கி
மின்னவிர் முடியான் றன்சீர் விளங்கிய வாச றன்னின்
முன்னுறத் தூக்கி வைத்தான் முகுந்தனார் மதலாய் நீபோய்

92 அறுத்திவண் கொணர்வா யென்ன வச்சுத னருளிச் செய்ய
வெறுப்புடன் விருப்பொன் றில்லா விட்டுணு சித்தன் கூறுங்
கறுத்தமா முகிலே வாதில் வென்றவர் கைக்கொ ளென்றே
[illegible] மன்னன் வாய்மை நீணில மதனிற் றொண்டன்.

93 எதுரைத தறுடம்ப னெந்தா யிருகையா லெடுத்து வெட்டு,
நீதிமண் வெட்டிக் கோட்டா னிறைபெருந் தழும்பைக் காட்டி
வேதநிச் சயங்காட் டாதே விமலனே யறுக்க லாமோ
பூதல மாளு மன்னன் பொறுப்பனோ புகல்வா யென்றான்.

94 அன்பரிவ் வாறு கூற வச்சுத னவரை நோக்கித்
துன்பிலா மன்னன் கேட்ட சுருதியின் முடிவைக் காட்ட
லென்பரம் வாயி றன்னி லிலங்குபொற் கிழிகைக் கொ
ளுன்பர மேகா வென்றுங் குரைத்தி

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY.
BESANT NAGAR. MADRAS-90

# பெரியாழ்வார் பிரபந்தம்.

பூதல முழுதி லுள்ள புலவர்கள் சபையி னுள்ளே
மாதிரம் பொருந்து திண்டோண் மன்னவர் மன்னன் முன்னே
யோதுமோ ரெழுத்தும் போகா வூத்தையே னுடலந் தா
நாதனே வெட்க மின்றி நண்ணுத லலனோ வென்றார்.

என்றிவா றுரையக் கேட்டங் கிறைபெரு முறுவல் செய்து
நன்றிகொள் வேத நான்கு நவிலுஞ்சாத் திரமோ ராறு
மின்றென துடைமை யாகு மென்னைநீ யுடைமை யானு
லொன்றுனக் கரிய துண்டோ வுத்தம குணத்தி னானே.

97 என்னமின் னவிரு நேமி யெம்பிரா னருளிச் செய்யப்
பொன்னடித் தலத்தில் வீழ்ந்து புண்ணியக் கொழுந்தே யன்னார்
தென்னவன் மதுரை தன்னிற் றிருமக ளாதை வின்றே
மன்னுவான் விடைகொள் கின்றேன் வாழியென் றெழுந்து வாழ்த்தி

98 நின்றவர் தம்மை யேகு நீயென வனுப்பித் தாமுஞ்
சென்றுதங் கோயில் சேர்ந்தார் திருமறு மார்ப ரன்று
நன்றிகொள் பெரியாழ் வாரு நற்றவத் தோர்க டாங்கப்
பொன்றிகழ் சிவிகை யேறிப் பூபதி கூட னீக்கி.

99 எகினா ரன்பர் சூழ விமையவர் வணங்கி வாழ்த்த
மாகமீ திலங்குஞ் சோதி மதிக்குடை நீழற்றச் சீர்கொள்
பூகமார் மருத வேலிப் புதுவைமா நகர நீங்கி
மேகமே சாவா யென்ன விழிவழி யருவி சோர.

## வேறு.

00 கற்குழைய மரங்குழையக் கானில்வளர் விலங்கினத்தின்
விற்குழையப் பறவைகளின் மெய்குழைய மேதினியிற்
புற்குழைய வேதாந்தப் பொருள்குழைய மெய்ஞ்ஞானச்
சொற்குழைய வேகுமவர் துலங்குவனம் பலகடந்தே.

## வேறு.

01 சென்றனர் மதுரை நோக்கித் தென்றிசை வாயில் சே
நன்றதி னுறையுங் கூட லழகிய பெருமா டன்னை
யொன்றிய மனத்த ராகி வணங்கினா ரோவா தன்பா
னின்றிருந் தவரை நோக்கி நிலவுசித் திரம தானார்.

02 இமைத்திலர் விழிகள் வாயா லிசைத்திலர் துதிக ணின்ற
தமைச்சில கடிகைப் போது முணர்ந்திலர் தாணி தாங்குங்
கமைப்பெரு முகின்மேற் சென்ற கருத்தினைத் திருத்தி வாக்கா
லமைத்தொடர்ந் தெடுத்தீர் கொள்வீ ரென்செய்கேன் கைம்மா றென

103 அவணகின் ருழ்வார் கூற வண்டமுண் டண்டத் துள்ளே
யுவணம தேறி வீதி யுலாவுவா ரிசைப்பா ரந்தோ
விவணமோ ரன்பா ஞேக்கி லிகபரத் திலதென் றெண்ணு
மவணமற் றவரே சென்றவ் வாதினை வெல்வீ ரென்ருர்.

104 என்றிறை யருளிச் செய்ய விருகணீ ரருவி சோர
நின்றவ ரிருந்தார் தம்மை நீனிலத் திறைஞ்சி வாழ்த்திச்
சென்றனர் வீதி யூடே தென்னவன் செயலே தென்னிற்
குன்றென வுயர்ந்த நீதிக் கோமுனை வாயி லெய்தி.

வே று.

105 வாசம லர்த்திரு மஙகையும் வாணியும வரம டந்தையும்
நேசமு டன்புவி மங்கையு நேர்பெற நேமி தரித்தவன்
றேசுடை வானவர் கோனெனச் செல்வமி குந்துசி றந்தசிங்
காசன மீதிலி ருந்தன னண்டரும் விண்ணவ னெருங்கினர்.

106 நன்றித ருஞ்செல்வ நம்பியு நான்மறை யாளரு மன்பருஞ்
சென்றுயர் தென்னனி ருந்ததோர் சீரிய வாசன மாடுற
வன்றரு ளெய்தவி ருந்தன ராசரு மன்னர மைச்சரு
நின்றனர் முத்திவி ரும்பினோர் நேர்பெற வந்துநி றைந்தனர்.

107 போக்குமி குத்துழல் புத்தரும் போதம கன்றவை சேட
நக்கனை நம்பிய சைவரு நன்றிகொள் சாங்கிய யோகரு
தொக்குல காயுத வீணருந் துன்புறு மாவிர தத்தரு
மெக்கரு மத்தினு மையுற வேயுறு மாற்கரு மெய்தினர்.

108 மாயைத ரும்பெரு வாதரும் வஞ்சம்வி டாவரு கோர்களு
மெய்வறு வாமியர் கூட்டமு மாதிய வாதிய ரெய்தின
ரயுறு மவ்வவை யின்கணே யேழுல குண்டவர் தொண்ட
தூயது யத்தைவி ளக்கியு சுந்தர வந்தணர் தோன்றினர்.

109 தோன்றிய வன்பரை நோக்கினன் ருமறு வார்செல்வ நம்பியு
ண்டவர் தொண்டனு ரெய்தின ரென்றுமொ ழிந்திட
வூன்றுமெய் யன்பின்மன் னேக்கின னுத்தம னர்வண மாயனுய்த்
தோன்றினர் தென்னவன் கண்களோர் துண்ணென வோடி யெ

வே று.

110 எழுந்திருந்த வீறர்தென்னன் செல்வநம்பி யுடனேயிச்
செழுந்தவனை யடிவணங்கிச் சீரியநான் மறைக்குமொரு
கொழுந்தென்னத் திருவுருவங் கொண்டபெரி யாழ்வாரு
விழுந்திறைஞ்சு மன்பர்களை விரைந்தெடுத்த சீர்வதிப்ப.

# பெரியாழ்வார் பிரபந்தம்.

1 கொடியகொடு வினைக்கீடாய்க் கூற்றுவன்கைப் பட்டுழலு
மடியனேற் கருணல்கி யாளவந்த திருவுருவோ
படிமீதின் மாமாயை பாறவந்த பரஞ்சோதி
வடிவிதுவோ வெனமன்னன் மகிழ்ந்துரைத்தாங் குடன்கொடுபோ

சீரியசிங் காதனத்திற் றேவவினி திருத்தியென்று
னேரியனுன் மறைவல்லா ரெழிலரியா சனத்திருந்தார்
கூரியமெய் யறிவில்லா வாதியர்கள் குழாத்திடையிற்
றேரிலுறு மிரவியெனச் சென்றவர்தே வர்கள்கண்டார்.

வாசவனு மதுகண்டு மற்றிவனுற் றென்னவனம்
ஈசனடி யறிந்தடைவ னிவையுலக்க வேண்டுமெனத்
தேசுபொலி சுரர்குருவைச் சென்றுசிங்கா சனத்திருந்த
மாசிலான் றனைவெல்க மானுடனு யெனவிட்டான்.

இந்திரன்சொற் பணியாலே யிருநிலத்தில் வியாழகுரு
வந்துமா னிடவடிவாய் மன்னவன்முன் றோன்றினு
னெந்தநா டெவ்வூர்நீர் யாவரதை யியம்புமெனச்
சந்திரன்சீர்க் குலத்துதித்த தார்வேந்தன் மகிழ்ந்துரைப்ப.

5 பொன்னுலகாள் பவன்கூறாற் போந்தவர்சென் றாங்கிருந்து
மன்னவநீ கிழிகட்டி வாதிடைநின் றவர்கொண்மி
னென்னவுரைத் தனைபார்ப்பா னேதுசெயித் தவன்றுளிற்
றன்னவிழுந் தனையாதைச் செப்புதிநா னெனைச்செப்ப.

6 என்றுரைத்த வவ்வேலை யிருந்தசம யத்தவர்க
ளொன்றுபட வியாழகுரு வுடன்கூடி முடிவேந்தை
யின்றெமது முன்னுக விருநிலத்தி லிறைஞ்சுவித்த
நன்றிதீரும் வேதியரே கிழியறுக்க நாமுமென.

7 சன்னைசொல்லி யவன்பதத்திற் றாழ்ந்தமன்னை மிகவிகழத்
தென்னவனு மருகிருந்த செல்வநம்பி முகநோக்கி
யென்னையினிச் செய்வதென யியம்பியிடு மளவையினின்
மன்னவமற் றிவரவரை வெல்வார்வருந் தேலென்றான்!

8 எனவியந்து செல்வநம்பி யுரைப்பவிற வியல்வேந்தன்
மனமகிழ்ந்தாங் கினிதிருந்தான் வானவர்கோன் விடுத்
னவயல்சூழ் புதுவைநக ரச்சுதனுர் விடுத்தவரும்
வினவரிய பரசமைய தர்க்கத்தின் மிகமூண்டார்.

9 பரத்துவமே தறைந்துகிழி பற்றுமென்றான் வி[illegible]முனி
விரத்திநெறி நின்றவரும் விண்டுவென்று ரண்டர்குரு
வுர்த்துமல ரயனென்று ளேதவண்ணர் தொண்டரவன்
சிரத்தையரன் கைக்கொடுத்த திறமறந்தா யோவென்றார்.

20 நன்றவ்வா றுணூலு நாரணனென் றேபரமன்
கொன்றைமுடி வைத்தருண வெற்பரென்றே கூறுதுநா
மென்றனன்வா னவர்குரவ னேழுலகு முண்டவனை
யொன்றியசீர் மனத்துள்வைத்த வுத்தமனார் நகைத்துரைப்பார்

21 அறிவிலாய் முன்புகன்ற வயன்சிரத்தை யறுத்துரைத்த
மறியமரூங் கரத்தரனார் மற்றவினை போக்கியிடு
நெறியறியார் பலியிரந்து நெடுங்காலந் துயரமுற
வெறியார்பூந் துழாய்முடியெம் விண்டுவென்றே வறுதவிர்த்தா

22 இவ்வண்ண மிவர்கூற விமையவர்தங் குருவுரைக்கு
மெய்வண்ண முடைக்கால கற்பிதத்தில் விட்டதெனப்
பொய்வண்ணக் காலத்தைப் பரமென்றான் போக்கற்றான்
மைவண்ணப் பரஞ்சோதி தொண்டரிவை மறுத்துரைப்பார்.

23 காலமொரு மூன்றுமுடைக் கடவுளரார் கருத்தினிடை
மூலமுடி வறியாதாய் மொழிகவென வவன்மொழிவான்
ஞாலமிசை யிருணீக்கி நற்பொருளை விளக்குவிக்குங்
கோலவெழிற் கதிரொளியை யவன்பரமா மெனக்கொண்டே.

24 உரைத்தனனவ் வுரைகேட்ட வுத்தமனார் முறுவல்செய்து
வரைத்தடந்தோள் விறன்மன்னன் மாமுகத்தை நோக்கியிவன்
றிரைக்கடலுட் டினம்பிறந்துஞ் செத்துமுழல் கின்ற
யிரைக்குமறை காணாத பரமென்றா விசைந்திடுமோ.

25 சொல்லாயென் றனராழ்வார் தொல்லுலகங் காத்தளிக்கு
மல்லார்திண் புயத்தென்னன் மதிகெட்டா னெனவுரைத்த
கல்லாத சுரர்குருவுங் கட்டுரையற் றாங்கிருப்ப
வல்லாருந் தங்கடங்க டெய்வமெழிற் பரமென்றார்.

-- ...துய... செல்வநம்பி யாழ்வார்த முகநோக்கி
யிதுவேனிப் புல்லருட னெம்பெருமான் விளையாடன்
மதுவேக ...தற்பொருளை மொழிந்துவெளி யிடுகவென
கருமமென வாழ்வாராங் கெதிர்ந்தவரில்.

27 சைவர்களாங் கரித்திரட்கோர் சாற்றுசிங்க வேறானார்
பொய்யுடைய வாமிகளாம் புலையிருட்கா தவனானை
ரையமுறு புத்தர்களா மாட்டினத்துப் புலியானார்
மையலரு கப்பஞ்சின் மாகனலா னார்பிறராம்.

28 சற்பங்க டனைமாய்க்குங் கருடனெனத் தான்சமைந்தார்
நிற்பனசெல் வனவிரங்க நேமியான் றிருத்தொண்ட
ரற்புதமென் றமரர்குழா மிறைஞ்சவா ரணத்தூந்தச்
ம்பரக்கை யலகுய்யத் தென்னவன்முன் கூட்டுரைத்தா

கட்டுரையைக் கேட்டுமெண்ணோர் கனன்மெழுகாய்க் கரைந்திட
டொட்டுயர்ந்த மண்டபத்திற் றூக்கியசீர்க் கிழிதாழ
வெட்டெழுத்துக் குறைவிடமா மாழ்வார்த மிருதாளிற்
பட்டகிழி தனையறுத்துப் பாண்டியனுமுன் பரிந்திட்டார்.

130 தென்னவனச் செயல்கண்டு திருவடியி லுறவீழ்ந்தான்
முன்னவனை யிகழ்ந்துரைத்த முழுமூடச் சமையத்தார்
மன்னவனு முறுவல்செய வந்தாழ்வார் பதத்திறைஞ்சப்
பொன்னகரத் திறைபணியாற் போந்தவரும் போயினரால்.

வ ரு

இடிநிகர் முரச மார்ப்ப விமையவர் குழாங்க ளார்ப்பப்
படிமுழு தடைய வாளும் பாண்டியன் பரிவி னோடும்
மடியனே னல்ல நீர வாளவந் தவரே யின்றிக்
கடிநகர் வலமாய் நண்ணிக் காட்சிதந் தருள்வீ ரென்றான்.

132 என்றசொற் கேட்ட போதி லீசனை நினைந்தாழ் வாரு
மொன்றதற் காமா காதென் றுரைத்தில ரொடுங்கி நின்று
சென்றெடுத் தவரை நீதித் தென்னவன் நீலக் கைக்குன்
றொன்றென வுயர்ந்த யானை யெருத்தமீ துவப்போ டேற்

133 பூதமோ ரைந்து மேத்தப் புரையறு மறங்க ளேத்த
வேதமோர் நான்கு மேத்த விண்ணவர் குழாங்க ளேத்த
வோதுமூ வுலகு மேத்த வோங்கிரு சுடரு மேத்த
மூதறி வுடைய மன்னன் சேனைகண் முழுது மேத்த.

134 அந்தணர் குழாங்க ளேத்த வருமுனிக் கணங்க ளேத்தப்
பந்தணை விரல்சேர் செங்கைப் பாவையர் வீதி தோறுஞ்
சந்தனக் குழம்பு சுண்ணந் தாதவிழ் மலர்கள் சிந்தி
யிந்திர விழாவ தென்ன விறைத்தனர் மணியும் பொன்னும்.

135 மதிக்குடை நிழற்றத் தெய்வ மங்கையர் கவரி வீசக்
கதிக்குநின் றிரங்கு வோருங் காசினி யோருங் கண்டு
துதித்தெழ வேகுங் காலைச் சுடரொளிப் பரலோ கத்திற்
பதித்தபே ரருளோ டோங்கும் பரவசா னந்த நாதன்.

13 அந்தமில் பேரின் பத்தா ரடியரோ டமைந்த சோதிச்
செந்திரு மார்ப ராழ்வார் சிறந்தசீர்ப் பவனி காண
வந்தனர் கருடன் மீதின் மான்மறிக் கரனும் வையந்
தந்தநான் முகனும் போற்றத் தாமரைச் செல்வி யோடும்.

137 மண்ணெலா மனிதர் செற்ற மறையவர் மறைகள் பாட
விண்ணெலா மிமையோர் செற்ற விரிஞ்சனு மரனும் போற்ற
மண்ணலீர் நித்தர் முத்த ரணியணி நிரைப்ப வாழ்கே
கண்ணெலாங் களிப்ப[illegible] வேங்கடவன் மகிழ்ந்து போற்ற.

38 கண்டியர் பெரியாழ் வாருங் கருத்தினி லிறுமாப் பற்பங்
கொண்டிலர் கொண்டல் வண்ணன் குளிர்மதி வதனங் கண்ட
புண்டரீ கத்துள் வைகும் பூவையை மார்பிற் கண்டார்
தொண்டர்கள் குழாத்தைக் கண்டார் துணைவிழி யருவி சோர

139 கருதுவார் கருத வாடுங் கருணையங் கடலார் மேனி
மிருதுவை யிளமை தன்னை மெய்யுறு குழைவை மார்பில்
வருதிரு வருளைக் கண்டு மண்ணவர் கண்ணே றாலே
பொருவரு முருவில் மாசு புகுமெனத் துணுக்கென் றஞ்சி.

140 தன்னிரு விழிகள் சென்று சாரினும் பிழைக்கு மென்ன
முன்னுறப் பல்லாண் டென்று மொழிந்துகாப் பிட்டக் கோலப்
பின்னுறக் காண்போ மென்று பிரிந்தொரு திசையை நோக்கி
யென்னையாண் டருள்வார் பல்லாண் டெனுந்திருப் பதிகந் த

141 ஆனைமே லிலங்கப் போட்ட வணிமணி தாள் மாகத்
தேனையுந் தலங்க லான்றன் சேவடி செவ்வி மார்பிற்
கானையுந் தளத வல்லி கதிரொளித் திகிரி சங்க
மேனைய பிறவுங் காப்பென் றிசைத்தன ரிசைத்த பின்னர்.

142 நோக்கினார் திருக்கோ லத்தை நேரற்றநோன் புடைய வன்பர்
வாக்கொடு மனமுங் கண்ணும் வள்ளற னுருவிற் பாயக்
கோக்கிளர் மதுரை யுள்ளோர் மன்னவன் கோதி லாத
பாக்கியச் செல்வ நம்பி யெனுமவர் பலருங் காண.

வேறு.

143 உளங்கருணைச் சடகோப ருரைத்ததிரு வாய்மொழியில்
விளங்கியசீர் நெறிப்படியே விமலனருட் கருடன்மிசைக்
ளர்ந்துபிர மன்சிவனென் றிவர்வணங்கக் கிளரொளியா
ளந்தெவரு மறிவரிய வச்சுதனார் வீற்றிருந்தார்.

144 அவ்வண்ணம் வீற்றிருந்த வருளுருவை யாழ்வார்கண்
டெவ்வண்ணத் தவஞ்செய்தேன் யானந்தோ வெனவழு
மவ்வண்ண மிலாதவரு மலர்க்கரங்கள் சிரங்குவித்து
மைவண்ணப் பரனைகைம் மாறில்லே னெனவாழ்த்தி.

145 காராருந் திருவுருவின் கருணையினு ளுளமழிந்திட்
டாராத காதலினு ரனுபவமுள் ளடங்காதே
கூராழி சங்கேந்துங் கொண்டலுக்குப் பாமாலை
சீராருஞ் சொற்றமிழாற் பாடவென்று சிந்தைசெய்தே.

மச்சமுதல் கற்கிவரை மண்ணிடையில் வந்துதித்த
வச்சுதனார் திருவுருவி லாயர்மனை வளர்ந்தவர்த
மெச்சதிருக் கலியாண குணங்களுமெய் விளங்கியசீர்ப்
பச்சைமயிற் யாவுகளும் பருவத்தில்

147 பாவொன் சிந்தித்தும் பரிவோடு மிறைநிறுத்தான்
ஆவொ னினைந்தனரத் தோமில்லார் தஞ்சிரத்திற்
றேவொர் தேடநின்ற திருமால்சீ ரடிவைத்தார்
னுடினோர் வானவர்கண் மண்ணவர்க ளதிசயித்தார்.

148 சைவர்முதற் சமையத்தார் தத்தமக்காங் கடவுளரைக்
கைவிட்டா ரிங்கில்லா ரங்கில்லை யெனுங்கருத்தான்
மெய்வைத்தார் திருமால்சீ ரடியார்தம் விரைமலர்த்தா
ளணைவுற்றான் பாண்டியனு நாரணன்சீர் நலந்தெரிந்தே.

149 நின்றனனக் காலத்து நெடுமாலுஞ் சமயிகளை
வென்றவரே யின்றுமுதல் வேதக்கோன் பட்டர்பிரா
னென்றிசைக்கு மெழினாம மியம்பினோ மெனவியம்பிச்
சென்றனர்வான் றேவருடன் றெளிவிசும்பிற் சேர்ந்தனரால்.

150 பட்டர்பிரா னாழ்வாரும் பரஞ்சோதித் தடங்கடலா
மெட்டெழுத்தின் றனிநாத னேகியபின் மாகரியை
விட்டிறங்கித் தோற்றவரை வியன்மதுரை மன்னவனை
மட்டவிழ்பூந் துழாய்முடியா னடியவராய் மன்னவைத்தே.

151 மனக்கருத்து முற்றுவிப்பான் வடமதுரை பிறந்தவர்வாழ்
புனத்துளப வனஞ்சூழ்ந்த புதுவைநகர் தனிற்போந்து
தினத்தினமு மருள்விளங்குந் திருப்பல்லாண் டாதியாய்க்
கனத்தவருட் சென்னியோங் கத்தமாய்க் கலைதெரிந்தே.

152 நன்னெறிச்சீர்த் திருமொழியோர் நானூற்று நாற்பதையு
மின்னிசையா லெடுத்தோதி யேழுலகு முய்வித்தாங்
கன்னவயற் புதூரி லளவிறந்த பலகால
மின்னுமணி முடிமாயன் றிருவடிக்கீழ் வீற்றிருந்தார்.

20764

MAHAMAHOPADHYAYA
Dr U V S IYER LIBRARY,
BESANT NAGAR MADRAS-90.

ஸ்ரீ

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

இந்தவகை பெரியாழ்வா ரிலங்குமருள் புவிமீது
யந்தரத்துந் திசையெட்டுந தழைத்தோங்கு மந்நாளி
லெந்தைதிருக் கலிகன்றி யெழிற்குறையற் றிருநகரில்
வந்தபடி யருள்வழியால் வாழ்ந்தபடி வகுத்துரைப்பாம்.

மாயவனை வாள்வலியான் மந்திரங்கொண் டவர்திறத்தை
யாயவெனை விதித்ததெய்வந் தானேமற் றடியேனே
பேயரென வறியகிலேன் பேதையேன் பிதற்றுவதந்
தூயவனார் பெரும்புகழ்க்கோர் துகள்வருத்தத் துணிதலினால். (௨)

அருந்தமிழு நான்மறையு மந்தணரும் வீறுபெறத்
திருந்துநெறித் தொண்டரணி தேசமெங்குஞ் சிறந்தோங்க
விருந்தருந்தி விதுரனுடை வின்முறிப்பித் தவரருளா
லிருங்குறைய லூர்நகரின் மண்முழுது மீடேற.

ஆத்திபிறை யரவணிவா ரகம்படிமைக் குடியினிடைக்
கார்த்திகைக்கார்த் திகைதன்னிற் கருணையிளங் கொழுந்தென்னப்
பூத்தவுநதி யெழினமாயன் பொன்னடியை யெவ்வுலகு
மேத்தவைத்த பரகால னிருநிலத்திற் றோன்றினான். (௪)

நறுந்துளவ முடிமாயன் வயிற்றிலுல கிடைநண்ணி
யுறும்பெருண்மற் றவரென்னு முணர்வறியாப் பரசமயக்
குறும்பறுர ம்வைமாய்க்குங் கோளரியின் குருளையெனப்
பெறுந்தருமக் கொழுந்தென்னப் பிள்ளைவளர்ந் திடுநாளில். (௫)

வேறு.

காம மாதிகள் கைவல மென்னும்பேய்
வாம மாதிகண் மாயவு மன்னிய
தூம னத்தர்க்குச் சொற்றெரி நீலனெ
நாம மிட்டனர் நான்மறை யாளரே. (௬)

வேறு.

நமறையின் முதற்பொருளி லாய்ந்தெடுத்த பாவமிர்தான்
நமொழிசெய் தடியவர்கள் செவிப்புலனை நிறைப்பவர்க்குக்
காயவிழிச் செய்யவாய்க் காரிகையார் களிப்பிறைடு
முரியவமிர் தவையூட்ட் வுலகமுண்டார் தொண்டருண்டார் (௭)

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

ஒத்தார்மிக் காரில்லா வுத்தமனார் தொண்டரந்நாள்
வத்தாவி னூலுகந்த மாபிரிவினையின் குறைமுடித்துச்
சத்தாகி யுரங்கெடுத்துச் சதுமறையை யுணர்வாரு
முத்தாரைச் சொற்றமிழும் வடமொழியு முழுதுண

ஆயகலை யறுபத்து நாலுமடை வாலுணர்ந்து
தூயபரம் வெளியிடவித் தொல்லுலகிற் பிறந்தவனை
வேயமர்தோட் பின்னைகோன் விளையாட்டுக் கொளவேண்டி
மாயையைவிட் டவர்தம்மை யறியாத வகைமறைத்தான்.

உரமொத்த திருநாத னருளால்வந் துதித்தவருஞ்
சிரமத்தின் றொழில்பயின்றார் செகத்திலிவ ருடனெதிர்ந்தார்
விரமற்று ராயுதத்தான் மிகுதிறலுங் கைக்கொண்டார்
பரமத்தர் சரணென்னப் பாதுகைக்கீழ் விழவளர்ந்தார்.

மாமாயை வகுத்துயிரை வருத்தியுயிர் வாடல்கண்டு
தாமாவி சோர்ந்தவையைத் தவிர்க்கவெண்ணாத் தவிராதே
யேமாறி யழுதிரங்கு மெம்பெருமா னேவலிலத்
தேமாலை மார்பினரைச் செறிந்ததுதன் சிக்கனவால்.

கற்றின்ப வீடுகண்டு கலைதெரிந்த திருமடலாஞ்
சொற்றமிழான் மாமாலைத் துணையாகத் துணிபவர்தா
முற்றபெரு மாமாயை யுடையவனே யூட்டுதலாற்
சிற்றின்பப் பெருங்கடலிற் செறிந்தாழஞ் சோதித்தார்.

## வேறு.

திருவய தொருபத் தாறிற் செங்கணா யகனார் தொண்ட
ரரிவையர் தங்கட் கின்ப மருளுமன் மதனு மாகி
யொருபொழு தகலா நீதி யுடையமா மாத ரோடு
வருபகல் பலவு மன்னி வளருநா ளொருநாண் மாயன்.

இனிதமர்ந் துறையு நீதி யெழிற்றிரு வாலி
புனிதநீர்ப் பொய்கை சூழ்ந்த பூம்பொழிற் [illegible]
னனிமறை யந்த ணாள னொருவனோ டோறும் வைகித்
தனியிருந் தகத்தி னுள்ளே தரணியுண் டுமிழ்ந்தார்க் கன்பாக்

பூசனை யியற்றி யன்பிற் போதுவா ரந்நா ளந்த
மாசறு பொய்கை தன்னில் வானவூர் மங்கை மார்க
ளாசறு விமானத் தேறி யகன்புன லாடிப் பூக்கொய்
தீசன் தாவி நோக்கி யிட்டுவா னெய்து வார்கள்.

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

அப்படிப் பலநா ளெய்து மரிவையர் தம்மை யோர்நாட்
செப்பமார் மறைவ லாளன் றிருக்கணைத் திறந்து கண்டா
னொப்பிலா மங்கை மார்கள் யாவரு முயர்தே ரேறி
யிப்படி விட்டு வான்சென் றெய்தினா ரிமையா முன்னம்.

ஆங்கதி,லொருத்தி பூவுக் ககன்றவ ளவரைக் காணா
ளேங்கினாள் பதைத்தா டேடி யெங்கணுந் திரிந்து வாடித்
தாங்கிய தவத்தோ டோங்குஞ் சதுமறை யவனைக் கேட்பப்
பூங்குழ லார்கள் போனார் பூவைநீ யஞ்ச லென்றான்.

போயினா ரவர்க ளென்ற பொழுதினின் மறையோன் றன்னை
யாயிழை வணங்கி நானுன் புதல்வியா மையா வென்னைத்
தூயநின் மனையிற் கொண்டு போகுதி தொடர்வே னென்றாள்
வேயமர் தோளி தன்னை வேதிய னுடன்கொண் டேகி.

தன்னகம் புகுதான் வஞ்சத் தரணியோர் தங்கட் கஞ்சிப்
பன்னகப் பாயன் மேவும் பரஞ்சுட ராலி நாதன்
பொன்னகம் படியா ராகிப் புனிதன்முன் னிருத்தஞ் செய்து
முன்னகம் விளங்க வாழு முதற்குடி யாரி லோர்பெண்.

பொருளினா லுயர்ந்தாள் கண்ணோர் புத்திரி யின்மை யாலே
யருளுடை யவர்க்குத் தற்பி னுடல்பா டற்கா ளின்றி
யிருளுறு மனத்த ளாகி யிராப்பக லிரங்கு வாள்பாற்
றெருளுறு மறையோ னம்மா மயிலொடுஞ் சென்று புக்கான்.

தெய்வவான் விளக்கி னோடைச் சேயிழை தன்பா லல்
ஐவகைப் புலனை வென்ற வந்தண னணையக் கண்டு
மையமர் கண்ணா ளந்த மறையவன் கழலில் வீழ்ந்து
கையுமெய் புடைய ளாகி நங்கையு மெழுந்து நின்றா...

நின்றவத் தைய லாளை நிகரிலா மறையோ னோக்கி
யின்றுனக் கிவளை யீந்தே னிரங்கலை புதல்வி யாக
நன்றிசேர் தவத்திற் பெற்றே னானிவ டாதை யாகு
மென்றுரைத் தவனுந் தன்பா லெய்திய வாறு கூறி.

வேதியன் போனான் றெய்வ விளக்கினை யுகந்து நாளு
நீதிகொண் மடவா ளாவி யாமென நினைவாற் பேணி
யூதிய மிவளா லெய்து முலகுக்கு மெமக்கு மென்றப்
போதினா ளனையா டன்னைப் பொதுவற வளர்க்கு நாளில்.

மண்ணிடை மங்கை மார்க்கும் வளரொளி யிளமை மாறா
விண்ணியன் மங்கை மார்க்கும் வெயின்மணி நாக லோகத்
தெண்ணரு மங்கை மார்க்கு நாயக மிவளென் றெண்ணும்
[illegible] குமுத வல்லி யென்பதோர் பெயரு மிட்டார்.

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

ஆடகச் செம்பொ னாலே யமரர்நாட் டணங்கி னாளைப்
பாடகஞ் சிலம்ப தாதிப் பணிகலை பலவும் பூட்டி
யேடவிழ் துளபத் தாரா னிணையடி தொழுவித் தாங்கே
நாடகம் பயிலும் வண்ண நாடகச் சாலை சேர்த்தார். (உ

தேமல ரிருந்த வேதன் சிந்தையாற் படைத்த தெய்வத
தாமநீள் குழலாண் மஞ்ஞை வெருவுறுஞ் சாயல் கண்டாங்
கோமெனு மெழுத்தை யுன்னி யொடுங்கிய முனிவோர் தாமுங்
காமனும் பணிசெய் தேத்தக் காரிகை வளரு நாளில். (உ

வையக முழுது மாளு மன்னவர் பலருங் கேட்டத்
தெய்வமா மடந்தை தன்னைத் திருக்கலி யாணஞ் செய்ய
வெய்துமோ நமக்கென் றெண்ணி யாவரு மிரங்கு நாளிற்
பொய்யறு குறைய லூர்வாழ் புண்ணிய ரதனைக் கேட்டார். (உ

கேட்டவப் பொழுதே தாமுங் கிளர்ந்தெழு தோழன் மார்தங்
கூட்டமோ டெழுந்து மேன்மை குலவுபொற் சிவிகை யேறி
யோட்டரிற் கடிதி னெய்தி யுத்தம ராலி நண்ணி
யீட்டுபஃ றவத்தி னாளைக் காண்பதெவ் விடத்தென் றெண்ணி. (உ

ஓரிடத் திருந்து தாந்த மொற்றரை யழைத்து நீர்போ
யாரிடத் திருந்தா ளந்த வணங்கினை டன்னை நோக்கி
யேருடை யெழிலை நோக்கி யெனக்கிவ ணுரைப்பீ ரென்னச்
சீர்பெற வனுப்பி விட்டார் சென்றவர் பதியைச் சேர்ந்தார். (உ

அன்றவர் மனையிற் காணா தகன்றுநா டகசா லைக்கே
சென்றனர் கண்டி லார்க டிகைத்தனர் பள்ளிக் கூடத்
தென்றதை நாடிச் சென்றோ ரெழின்மணி மாடத் தும்பர்
மன்றல்சேர் குழலி னார்கள் குழாத்திடை மயிலைக் கண்டார். (ந

மாந்தளிர் மேனி வாய்ந்த வடிவகி விழிச்செவ் வாய்பா
ளேந்திள முலையாள் கீதம் பயிலுமின் னிசையாள் சீறப்
பாந்தளி னல்கு லாள்செம் பஞ்சணை பதத்தாள் கான்சேர்
காந்தளங் கரங்க ளேந்தும் வீணையே ழிசையுங் காட்ட. ந

இருந்தவள் செயலைச் சென்ற தூதுவ ரிசையக் கண்டம்
மருந்தவப் பரகா லற்கே யாக்குமின் னமிர்த மாமிவ்
விருந்துணை வந்தார் தம்மை விரைவினிற் கொணர்வோ மென்னப்
பொருந்திய காத லார்பாற் போயிவை புகல லுற்றார். (ந

எந்தையா ——ரத் தேடி யெழுநிலை ம —— தன்னி
லிந்தமா நிலத்தின் பாக ரேத்தநான் முகன்றொ டாது
சிந்தையால் விதித்த தெய்வத் தெள்ளமு திருந்தாள் கண்டேம்
வந்துநின் னவி யரய மடந்தையைக் காண்பா யென்றார். (ந

தூதுவ ருரைத்த காமச் சொல்வழி மனத்தைப் போக்கி
மாதினைக் காண்போ மென்ன மன்னிய துணைவ ரோடும்
பூதநா யகற்காட் செய்யும் புண்ணியர் பொருந்து மேவல்
கோதறு குணத்தா ணம்மைக் கொள்ளுமோ வெனவுட் கொண்டு. ([illegible])

பொருக்கென வெழுந்து சென்ற புண்ணிய ரெய்து முன்னே
யருக்கன்மேல் கடலி லாழ்ந்தா னாயிழை யாலி மேவுந்
திருப்பொலி யூர்பர் நீதித் திருமுனி லாடப் போனாள்
குருக்களை யிகழ்வார் சிந்தை போன்றது குலவு மண்டம். (௫௫)

தூதுவ ரோடு சென்றத் துகளறு தலத்தி லின்ப
மாதினைக் காணா துள்ள மயங்கிமா துயர முற்றா
ரேதினிச் செய்வ தென்ன விருந்தன ரொற்றர் தேடி
யாதியம் பரமன் கோயி லெய்தினா ளாடற் கென்றார். (௫௬)

வேறு.

அத்த லத்தி லெய்த வெண்ணி யன்ப ரோடு மேகினார்
கொத்த லர்ந்த தண்டு ழாய்மு டித்த கொண்டல் கோயிலி
லெத்த லத்து ளோரும் வந்தி றைஞ்சு முற்ற மெய்தியச்
சித்தி ரத்தி லாவி பெற்ற தெய்வ மங்கை யாடினாள். (௫௭)

கண்டு ளம்ம கிழ்ந்தி ருந்த காமு கர்க்கு முன்னுறக்
கொண்டு கொண்டல் வண்ணன் மாம ருங்கி ருந்து கோதிலா
வண்டு கிண்டு தண்டு ழாய்ம லர்ப்ப தம்வ ணங்கினார்
பண்டு கண்டி லோமி தார்கொ லென்று பாவை நாடினாள் (௫௮)

நாடி யாடு பாவை தன்னை நாடி நண்ணி யாருயிர்
வாடி யென்செய் கின்ற தென்ன மன்னி னாரவ் வேலையிற்
பாடி யாடு சிந்தி லங்கொர் பாவை யோடம் மாதினாள்
சேடி மற்றி தார்கொ லென்று செப்பி னாள்வி ருப்பினால். (௫௯)

அன்பி[illegible]டி யாடு மன்ன மோடம் மின்னனாண்
முன்பு நான றிந்தி லேனிம் முறுவல் வாண்மு கத்தரைப்
பின்ப றிந்து கொள்ள லாகு மென்று தோழி பேசனு
மென்ப றைந்து கரும மெங்க ளீசர் தொண்ட ரல்லரேல்.

என்று சிந்தை நைதன் மாறி யீச னார்மு னாடினா
ளென்று கண்டு கந்தி ருந்த வாலி நாத ரர்ச்சகர்
நன்று பூசை யென்று ரைத்து நற்க லன்க ணல்கினார்
முன்றி னின்ற கன்று தெய்வ முளரி மாமு கத்தினாள்.

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

வேறு.

தோழியர்கள் பலர்சூழத் தும்புருநா ரதரென்ன
வேழிசையின் றிறம்பயில்வோ ரெழில்வீணை யாழ்முழவஞ்
சூழநிரைத் திரைத்துவரத் துகளறுசீர்க் கவிவாணர்
வாழியெனு முரைமுழங்க வானவர்நா டுடைமங்கை. (சஉ)

சீறடிநூ புரத்தரிகள் சிற்றிடையிற் றிடுமந்தோ
மாறியடி யிடுந்தோறும் வளர்தனத்தான் மலர்க்குழலி
லேறுமறு பதத்திரளா லெனப்பாங்கில் வருபவர்க்குக்
கூறுவதுபோன்றொலிப்பக் கோலமயில் பதிநோக்கி. (சங)

வேறு.

அன்னம் வெள்கந டந்து சென்றவ ளாவி யன்னமி னுரொடும்
பொன்னி லங்கிய மாட மாளிகை மேவி யங்கொரு பூவையி
னன்ன லந்தெரி வாச கங்கொள நங்கை நண்ணின ளிங்கிருந்
தென்னை யாள்கலி கன்றி செய்ததுமென்ன தாமெனின் மின்னனாள்.

போய பின்புபு ழுங்கு நெஞ்சர்பு லம்பு நாவர்பு லம்பிமா
மாய னுரை வணங்கி னூர்பின, ணங்கின் மேன்மனம் வைத்துநற்
றாய மாதிரு வாயி லெய்திய தோழன் மாரொடு துன்னினு
ராய காலைய னங்க னூர்கணை நாலு மாக மழுத்தினுர். (சரு)

அனங்க னூர்கணை பாய வன்றிய வன்றி லுஞ்சிறு தென்றலுங்
கனஞ்செய் தாவிகொள் கங்கு லும்பொரு காம நோயி லழுந்தினுர்
மனங்க ரைந்தொரு மண்ட பத்தினின் மன்னி யன்னம னுளெனப்
பினங்க மாமழு ணர்ந்து ரைப்பவர் விம்மி யிம்மொழி பேசுவார். ()

வேறு.

விண்ணுே ரமுதை வடித்ததினுன் மேனிசெய்திம
மண்ணுே ருயிர்கவர வந்த மணிவிளக்கோ மொழிந்தார்
பெண்ணுேவென் னுருயிரைப் பேதித்தாள் பெற்றதிருக்
கண்ணுே திருப்பாற் கடலோ கருதேமால். (சஎ)

ளா| காரோ வறலோ விருளோ கனங்குழைதன்
சீரோதி நெற்றியிலுந் திங்களோ விண்ணவ
மூரோ விரிஞ்ச னுலகோ வுறையுமிட
மாரோ விணையிவளுக் கந்தோ வறியேமா.

பூவாளி மன்மதனுர் பொற்சிலையோ நற்புருவ
மாவா திலமோ குமிழோ வணிமூக்குத்
தேவாதி தேவர் திருவாலி நாரணர்மு
னேவாத் தியரளித்துப் போனுர்க் குணரேமால். கோ (சசு)

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

வள்ளையோ காது வடித்த மதுரவுரை
கிள்ளையோ செவ்வாய் கிளர்கனிரோ தீவினையே
னுள்ளேயே நைய வுருக்குநகை நித்திலமோ
கொள்ளையோ நண்பா வெனதாவி கொம்பினுக்கே.

வட்டமதி யுள்ளாய் வளராதே தேயாதே
யொட்டியொளி ரொற்றைக் கலைப்பிறைபோ லுள்வளைந்து
கெட்டேன் றிருமுகத்திற் கேசவனே யென்றுரைத்தாங்
கிட்டதிரு மண்காப்பின் றென்னாவி கவராதோ.

சீரொத்த பூகக் கழுத்திற் சிறந்திலங்கி
யாரத் தொளிவீ சழகார் களந்தானோ
வேரொத்த வேயா ரிணைத்தோளோ வென்னுயிரை
வாரொத்த கொங்கைகளோ மாய்த்ததறி யோமம்மா.

மின்னா ரிடையோ வுடுத்தமணி மேகலையோ
பொன்னா ருரோமக் கொழுந்தோ புறவடியோ
வன்ன நடைதானோ வணிமயிலின் சாயலோ
வென்னாவி கொண்டகன்ற தேதோ வெனவிரங்கி.

வேறு.

அங்க னொந்துகலி கன்றி சோர்வதோ ரணங்கு காரணமி தாமெனு
கங்கு னங்கையிவை கண்டு நிற்றலரி தென்று கால்விசையி னேகின
பொங்கு தண்பரவை மன்ன னொந்துற புலம்ப லொத்தலை யலம்பிட
திங்க ளுங்குறைய லூர ருக்குவினை செய்ய வந்துதய மெய்தினார்.

அமுத வெண்கதிர் பரப்பி யார்கலியி னின்றெ ழுந்தலை தலைப்படுந்
துமிதன் மீத்ற நனைந்து மீமிசை தொலைந்து நானில வணங்கினாள்
விமுத னத்திணைக ளொத்த தாமரைக ளன்றி மென்பவள வாயெனு
குமுதம் வேல்விழிக ளன்ன காவிகள் குளங்க ளூடுற மலர்ந்தவா

எண்டி சைக்கணும் விளங்க விண்டல மிலங்க வந்துநிமி ரிந்துமை
கண்டு கொண்டமறு வண்ண ருக்கினிய தொண்டர் கஞ்சமுக மங்
னுண்டு கொல்லுறவு தண்மதிக் கென வொடுங்கி னுருயிர் நடுங்கின
ரண்டமுண்டவர் கையாழியென்ன வொளிவீசியாதவனுமெய்தினான்.

வேறு.

வெய்யவ னுதித்த போதில் வெண்மதித் தழலில் வெந்தத்
தெய்வவான் மடந்தை யென்றே சிந்தைநொந் திரங்கு மன்ப
பொய்யறு நண்ப ரோடப் பூவையைப் பொருந்தி நானின்
றுய்வதோ ருபாய மூண்டே லுரைமினீ ருரைமி னென்றார்.

ஆசறு மன்ப ரிவ்வா றறைதலு மருகி னண்ப
ரீசன தருளிற் போந்த விமையவர் வல்லி தன்னைப்
பேசிய முறையிற் பேசிப் பெருந்தனம் பெறுவார்க் கீந்து
மாசறு கற்பி னாளை மணவினை புரிவோ மென்றார். (ருஅ)

நன்றென வவரைப் புல்லி நம்பிமீர் செல்மி னென்றா
ரன்றவர் தம்மி னல்வ ராங்கதற் கிசைந்தன் போடுஞ்
சென்றனர் தெய்வ மங்கை சேடியர் மனையைச் சேர்ந்தம்
மன்றல்சேர் குழலி னார்க்கு வகுத்துரைத் தவரோ டேகி. (ருக)

கற்பக வல்லி மன்னுங் காசொளிர் மாட மெய்திப்
பற்பல வுரையுங் கூறிப் பரிவினி லிருந்த வேலை
யற்புத வணங்கைப் போற்று மன்னையும் பிதாவு மந்த
மற்புரை திரடோ ளாரை வந்தமை பகர்வீ ரென்றார். (சு0)

ஓதுமின் வந்த வாறென் றுரைத்தலும் புவனந் தந்த
வேதியன் முதைதொண்ட ரன்பர்கள் விளம்புந் தொல்லை
யேதமில் குறைய லூரி லெம்பிரான் பரகா லற்கிம்
மாதினை யுவந்து சார்வான் மகப்பேசி வந்தோ மென்றார். (சுக)

படிமுழு திறைஞ்சுந் தெய்வப் பாவைபாற் பூரந்த வன்பர்
குடிகுல முரைமி னென்றார் கோதில ருரைத்தா ரந்த
வடிவருக் கியாங்க ளிந்த மயிலினைத் தருவோ மென்றார்
துடியிடை யதனைக் கேட்டுத் தோழியர்க் குரைப்ப தானாள். (சுஉ)

சீரிய தேவர் நாட்டிற் செனித்தவென் னலத்தை மண்ணிற்
கார்முகில் வண்ணற் காளாய்க் கசிபவர் கைக்கொ ளாதே
யாரெனைக் கொள்வார் சைவற் கன்னையு மிணங்கி னாலேல்
வாருறு கொங்கை நல்லீர் மாய்ப்பனென் னுயிரை யென்றாள். (சுங)

கேசவ னடியார்க் கல்லாற் கிளிமொழி யிணங்கே னென்று
பேசிய வுரையைக் கேட்டுப் பேசியாண் டிருந்தார் சொல்வார்
மாசறு மயிலே யெங்கள் வள்ளலு மகிழ்வா னுங்க
ளீசனர்க் காமைபாவ ரெனவுரைத் தினைக்கி மீண்டு. (சுச)

மீண்டவர் குறைய லூரில் விமலர்பா லணைந்து கூறு
நீண்டமா லடியா ரல்லார் நீணிலத் தெவருநீசர்
தீண்டுமோ நீசர் தம்மைத் தெய்வவூரன் மங்கை யென்றாள்
வேண்டுகி திருமா றொண்ட ராயிடும் விரைவி லென்றார். (சுரு)

நணத்தினி லுயர்ந்த தெய்வக் கொம்பினை விரும்பி யென்பான்
மணத்தவி சேறு வானோன் மற்றவை யரிதோ வென்றக்
கணத்தினி லெழுந்து சென்று காம்பறத் தலைசி ரைத்துப்
பணத்தணைக் கிடந்தா ராழி சங்கமும் படர்பொற் றோளில். (சுசு)

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

பொறித்தபின் கேச வாதி நாமங்கள் பொருந்தச் சாத்திக்
குறித்தெழு சுண்ணஞ் சாத்திக் கோகன கத்தின் முத்தும்
வெறித்துழாய் மணியும் வெவ்வே றுகிமெய் விளங்கக் கோத்தங்
கெறித்தசீர்ச் சோதி மார்பில் யாவரு மிறைஞ்சச் சாத்தி. (சுஎ)

சென்றுமெய்க் கோலத் தோடுந் திருமணம் புணர்ந்தா ரன்ப
ரன்றிவ ருருவங் கண்ட வாயிழை யாலி நாதர்க்
கின்றிவர் தெரண்ட ரானு ரிதயத்தி லவரைக் காணே
னென்றுணர்ந் தமளி நீங்கி யிருந்தன ளிருந்தா டன்னே. (சுஅ)

என்னினைந் தகன்றீ ரென்று ரெழிலுடைக் குறைய லூரர்
மின்னெனு மிடையாள் கூறும் விண்ணவர் நாட்டின் மங்கை
யிந்நிலத் தரிக்கா ளானர் பாரியா யிசைந்தாற் கூடி
நன்னலம் பொருந்து நாளும் வேறுள நவிலக் கேளீர். (சுகூ)

மண்ணவர் யாக்கை மற்றோ ரோசனைப் பரப்பின் வட்டம்
விண்ணவர் தமக்கு நாறும் விண்டுவுக் கடிமை யாகி
நண்ணிய காயத் துற்ற செடியினைக் கெடுப்பர் நல்லோர்
புண்ணிய வாளர் நீரே யத்திறம் புகலக் கேளீர். (எ0)

வேறு.

எட்டெழுத்தே தாயா வெழிற்குருவே தந்தையாய்
மட்டார் துழாயான் மலரடியை போர்போதும்
விட்டகலா வன்பர் பிராதாவாய் வீறுடைய
சிட்டர்களோர் நூற்றெட்டுப் பேரைத் தினந்தினமும். (எக)

நன்னெறியாற் பூசித்து நாரணனி லெண்மடங்கா
யுன்னுங்கா லேற்ற முடையா ரெனவுகந்தே
யன்னவர்கள் சேட மருட்பாத நற்றீர்த்த
மென்னுமவை தானருந்தி யெய்துநா ளின்புறுநாள். (எஉ)

ஆதலா னீரு மவைசெய்து வந்தணைந்தாற்
போதெலா மென்பாற் பொருந்துநலங் கைக்கொளலா
மீதெலாம் வாரா வெனிலென்பா னீர்வைத்த
காதலா லென்ன பயனென்றாள் காரிகையும். (எங)

வேறு.

அவ்வுரை கேட்ட போதே யகன்றருட் குறைய லூரர்
செவ்விய வாலி நாதர் தொண்டரிற் சிறப்போ டோங்கி
நவ்விபோல் விழியாண் முன்ன நவிலுநூற் றெட்டு மூட்டு
வவ்விய வினைகள் விட்டார் மாமயின் மனையிற் சேர்ந்தார். (எச)

சென்றவர் தம்மைக் கண்டச் சேயிழை யெதிர்கொண் டேகி
யொன்றிய காத லோடும் பூவணை யுடனே வைகி
யன்றிலும் பெடையு மென்ன வனுபவக் கடலி லாழ்ந்து
ரென்றுமப் படியே பாக வதர்க்குமின் னமுத மூட்டி. (எரு)

மருவரு மயிலின் சாயல் வல்லிதன் சொல்லைப் பேணிப்
பொருவருங் குறைய லூர்வாழ் புண்ணியக் கொழுந்தே யுன்ன
ரருமறை முதல்வர் தொண்டர்க் கறுசுவை யடிசில் பேணித்
திருவுள மகிழ வூட்டிச் சிலபகல் செல்லு நாளில். (எ

விருந்தின ரருந்தும் வண்ணம் வேண்டிய தளிக்கின் றார்த
பெருந்தனஞ் சுருங்க வாடார் பிறருடன் கடன்கொண் டீந்தார்
பொருந்திய கடனும் பின்னைப் பூதலத் தீவா ரற்றார்
வருந்திருத் தொண்ட ருண்டி முடக்கிமான் மனையைச் சேர்ந்தார்.

அண்டமுண் டுமிழ்ந்தார் தொண்ட ரருந்துதன் முடக்கிச் சென்ற
தொண்டரைக் கண்ட போதத் தோயறு சிந்தை யன்னந்
தெண்டிரைப் பள்ளி கொண்ட தேவனை யும்மோ டிங்கே
கண்டில மென்ன வோடிக் கீதவடைத் திருந்து சொல்வாள். (எஅ

பழிப்பிலா நிலையீ ருற்ற வாற்றினைப் பகர்வீ ரென்றாள்
கிழிப்படு தனமொன் றின்றிக் கேசவன் றமர்கட் கூட்ட
லொழித்தது வினையே யென்று ரோவிய மதனைக் கேட்
வழிப்பறி பறித்து மூட்டி வருவதே கரும மென்றாள் எகூ

செழுந்தவ முடைய மங்கை திருடியு மிடுவீ ரென்ன
வெழுந்தனர் குறைய லூர ரிமைப்பினிற் பதியை யெய்தி
யுழுந்துருள் பொழுதிற் சார்வோ ருற்றவர் சம்பந் தத்தா
ரழுந்துற வாயி னோரென் றனைவரும் வருக வென்றார். அ0

என்றவ ரருளிச் செய்ய வின்னுயிர் போன்றா ரெல்லாஞ்
சென்றனர் சென்றார் தம்மிற் றிருடவல் லாரை யெல்லா
மன்றறக் கூட்டிப் போகா தவர்களை யனுப்பி விட்டு
வென்றிவே லீட்டி வில்வா ளத்திரம் விளங்கு சொட்டை அக

வேறு

நேரார் தடிவளை கடிகவ ணுடனே நிமிர்கைக்கோல்
பாரார் வளையஞ் சமுதா டென்வாள் பத்திரமுங்
கூரா ருங்கைக் கத்தியி னோடங் குசங்குந்தஞ்
சீரா ரங்கைக் கொண்டார் சென்றார் திசைதோறு

மேரு கிரிக்குந் தென்கட லுக்குமெ வெயிலோனவந்
தூரு கிரிக்கு மத்த மனத்தி லொளிமிக்கோன்
றேரு மிதிக்கு நாக மதற்குந் திகழுள்ளாம்
பாரின் மிதிக்கும் வதிவதி யெங்கும் படர்வுற்றார். (அங)

வஞ்சி நகர்க்கு மாமது ரைக்கும் வளர்சோழ
னெஞ்ச றவிர்க்கு நன்னக ருக்கு மிடைபோவார்
நெஞ்சு பறைக்கும் வண்ண மிலங்கு நெறியெல்லாங்
கஞ்ச முகப்பெண் மேன்மனம் வைத்தாள் களைவைத்தார். (அச)

வேறு.

நெறிதோறு மாளிருத்தித் தாம்போயோர் நிழலிடையி
லறியார்போ லிருந்துபெண்ணோ டாண்வதியி லகப்பட்டார்
பறிபோக்கி வந்தவர்க்குப் பழஞ்சீரை கோவணங்கள்
செறியாமுன் னெதிர்கொடுத்துச் சிந்தையிடர் கெடவுரைத்து. (அரு)

வேறு.

ஈட்டிய தனத்தி னோடு மெய்திமா றொண்டர் தம்மைக்
கூட்டிநால் விதத்தி லுண்டி கொழுங்கனி செழுந்தே னோடு
மூட்டிய சேடந் தாமு முவந்துபின் னருந்தித் தம்மைப்
பூட்டிய காத லாள்பாற் போயனு பவித்து வாழ்ந்தும். (அசு)

ஆண்டுபற் பலவுஞ் செல்லு நாளினி லொருநா ளன்பர்
பாண்டவர் தூத னைப ரஞ்சுடர் தொண்டர் துய்ப்பான்
வேண்டுவ வளித்த லாலே விமலனார் வினோதந் தன்னாற்
பூண்டமா மாயா வல்லி பூங்கழ றொழுது போனாள். (அஎ)

மாயவன் விடுத்த மாயை மற்றவன் வாங்கு முன்னே
போயதே யுலகு முண்ட புண்ணிய ரடியா ரான
தூயவர் தனிகைச் சேடந் துய்த்ததன் பொருட்டா லென்று
லாய்பவ ரெவரோ கண்ண னடியவர் திறத்தை யம்மா. (அஅ)

வேறு.

அந்நாளிற் றிருமங்கை யாழ்வாரு மடியவரும்
பொன்னாழி சங்கேந்தும் பூவைப்பூ வணாரருளாற்
பன்னாளும் வழிபறிக்குப் பலநெறியும் படர்வாருந்
தென்னாவென் றளிமுரலுந் திருமணக்கொல் லைக்காட்டில். (அகூ)

சென்றுபெரு வழிக்கரையிற் சேவகரைத் தெரியாம
லன்றநெறி யிருமருங்கும் பதிகிடையி லாங்கமர்த்தி
யொன்றியசீர்த் திருவரசிற் றானேறி யொற்றிருந்தார்
வென்றிவேற் பரகாலர் வழிப்பறிமேல் விருப்புடைத்தால். (கூ0)

அந்நெறியிற் றிருமங்கை யாழ்வாரு மமர்ந்திருப்ப
நன்னெறிசேர் வைகுந்த நாதனுமத் திறமுணர்ந்து
மின்னெறியுஞ் சுடராழி விளங்குநித்தர் முத்தருடன்
றன்னெறியாங் கமலையொடுந் தரணிசெறிந் தாழ்வார்க்கு. (கக)

வேறு.

மயர்வற மதிநல மருளிநாம் வருவது நலனென வானினு
மூயர்வற வுயர்நல முடையவ னுமையொரு கூறவ னுதியா
யயர்வறு மமரர்க ளடிதொழ வனவய லாலிநன் னுடருந்
துயரறு சுடரடி தொழுதெழத் தொல்லுல கதனிடை நண்ணினன். (கஉ)

பழிப்பறு பேரருள் வாரியாம் பங்கய வாணய னத்தனுர்
வழிப்பறி நல்கிய பின்னையா மந்திர நல்குதல் வண்மைசீர்
மொழிப்படு மின்னிசை பாடுவார்க் கென்று முரண்டரு மாயையின்
சுழிப்படு மானிடர் தம்மிலோர் சுந்தர வேதிய ராயினர். (கங)

செங்கம லத்துறை செல்வியுஞ் சீரிய வேதியர் மங்கையா
யங்கவர் தம்மொட மர்ந்தன ளண்டரு மண்டர்க ளாயினர்
சங்கர னும்முமை மாதொடுஞ் சங்கம ரூபம தாயின
னங்கம லத்தய னுருடன் வாசவ னும்மனு வாயினன் (கச)

நித்தரு மந்தண ராயினர் நேமிய ருட்பத மெய்திய
முத்தரு மவ்வண மாயினர் மூவுல குண்டவர் தாடொழுஞ்
சித்தரு மாமுனி வோர்களுஞ் சீர்வணி கத்திர ளாயின
ரத்தனு மாங்கவர் தம்முட னுசறு மோர்வன மெய்தினன். (கரு)

எய்திய வீசனு மன்பரோ டின்புற வோருரை கூறுவான்
வைதிக மாமண வாளனுய் மாதொடு பின்வரு கின்றனன்,
செய்திற முன்னிய வானுளீர் சீரிய தோர்நெறி யின்கணே
மைதிகழ் கண்ணியர் தம்மொடு மங்கையர் கோன்முன மேகுமின்.. (கசு)

வேறு.

என்றுரைத்தா னருணுத னிமையவல்லி தன்மணுடபரை
சென்றனன்முன் சங்கமரிற் றிலதமென மாதினொடு
மன்றுதிரு வரசின்மே லிருந்தருளு மாழ்வாரு
மின்றிவர்க டனங்கொளலா மெனவிறங்கி நெறியணைந்தார். (கஎ)

திருமங்கை யாழ்வாருந் திருவரசை விட்டிறங்கு
விருமருங்கும் பதிகிடந்த சேவகரு மெழுந்திருந்து
பொருகங்கைச் சடையானைப் போகவொட்டீ யெனமறித்தார்
வருமங்கை யதில்வெருவி மறைந்தனளாங் கரனிடத்தில். (கஅ)

20764

அப்போதவ் வுருத்திரனு மேகவுரு வாயமைய
விப்போதுன் னுடன்வந்த வேந்திழையெங் கேயதனைச்
செப்பாயென் றவர்மறுக்கத் திங்களறு கரவணிந்தங்
கெப்போது நடம்புரிவான் யாங்காணே னெனநின்றான். (௯௯)

வேறு.

ஆய காலையி னான்முக னங்கமர்
தூய வாணிதன் னோடவண் டுன்னிறு
னேய பல்கலன் கண்டதி லேகினார்
பேயொ டாடி பெயர்ந்தன னக்கணம். (௧௦௦)

சென்று மங்கையர் கோனருட் சேவக
ரன்று நான்முகன் றன்னை யடர்த்தெடா
வின்றுன் மேனியி லிட்டுடுத் திட்டதி
லொன்று வைக்கலை போவென் றுருக்கினார். (௧௦௧)

அன்னை வாணியு மஞ்சியென் னையன்மீ
ரென்னை நீர்வருத் தேன்மினென் மேனியிற்
பொன்னை யாடையைப் போட்டவிப் போதிலென்
மன்னை யும்விடு வீரென வாழ்த்தினாள். (௧௦௨)

ஆன வாசக மன்னமி யம்பலு
நான்மு கற்கொரு கோவண நல்கியும்
மான மாரருள் வாணிக்கு மாக்கலை
தான நல்கித் தனங்களை வவ்வினார். (௧௦௩)

முண்ட கத்தயன் போயபின் முத்தரு
மண்டரும்புகுந் தாரருள் வாரிதி
தொண்டர் மற்றவர் தொல்பொருண் முற்றவுங்
கொண்டு சேவகர் கையிற்கொ டுத்துநீர். (௧௦௪)

ஏகு மின்பதிக் கென்ன வனுப்பினார்
பாக சாதன் னாதிய பத்தர்கள்
மாக மீதின் மறைந்தன ரக்கணே
தோகை மாரும் வணிகருந் துன்னினார். (௧௦௫)

வேறு

அன்னவர் தம்மையு மன்பர் பறித்துத்
தன்னைய னின்றவர் தம்மி லளித்தே
நன்னக ரின்க ணடப்ப வனுப்பி
யின்னமு மிங்கேறி யேகின ருண்டேல். (௧௦௬)

கண்டு பறித்தவர் கைப்பொரு ளுமே
கொண்டகல் வோமென வன்பர் குறித்துப்
பண்டுறை கின்றர சின்பணை நண்ணப்
புண்டரி கத்திரு வோடரி புக்கான். க0எ

வேறு.

திருத்திகழ் மார்ப ரன்று திருமக ளோடு மெய்த
வொருத்தரா யரசி லேறி யுறைபவ ரதனைக் கண்டு
கருத்தினில் வியந்து தாமுங் கதுமென விறங்கி வேத
குருத்தினை மறித்துக் கொண்டு கொக்கரித் தாட லுற்றார். (க0அ

ஆடினு ராலி நாட ரங்கையுங் கொட்டிக் கொட்டி
யோடினர் வட்ட மிட்டா ருகந்ததை நோக்கி நின்று
தேடிநான் மறையுங் காணுத் தேவனுந் தேவி தானும்
வாடினர் போல நின்று மற்றவர்க் குரைப்ப தானார். (க0கூ

வேட்டமீந் தன்னி னின்று வேதியர் விரும்பு மாலி
நாட்டக நண்ண வென்றே நண்ணினே மெம்மை நீயிக்
கார்ட்டகத் தொருவ ரில்லாக் காலத்தின் மறித்துக் கொண்டிங்
கூட்டகம் புகுந்த பேய்போற் றுள்ளலென் னுரைப்பா யென்றார் ககO

ஈமைமறித் தாட லென்னீ யியம்புதி யென்னக் கேட்டு
நமைவுடைத் தாலி நாட ரருள்வரந் தணரே கேளு
மமையிவ ளோடுங் கண்ட போதிலெம் முள்ளந் துள்ளி
ர்மையுநா மிறந்தோ மந்த முறைமையை நவிலக் கேளீர். (ககக

வேறு.

என்னுவி யெனத்தோன் றுங் குமுதவல்லி யென்மனைவி
புன்னுவி யென்னுமிவ ளானுமவ ளுருவொவ்வாள்
பன்னுரு நூற்றெட்டுப் பாகவதர்க் கூட்டியல்லாற்
ரன்னுக மெனைத்தீண்ட வொட்டாளத் தார்குழலாள். (ககஉ)

பொன்னுளதும் பணமுளதும் பூவுடனெப் பொருளுமென்னிட
முன்னுளதுந் தொலைந்ததற்பின் வழிப்பறியின் மிகமூண்டேன்
மன்னுலகில் யானடித்துப் பறியாத வழியுமில்லை
யிந்நெறியி னீரணிந்து புகுந்தவிருந் தனங்கண்டால். (ககங

வேறு.

ஆடேன்று நானிவை விடுவேனே வையையா
பாடேனே நானுமை விடுவேனே பலவட்டத்
தோடேனே நானென் றுரைசெய்தா னுடையானு
.நின் றலர்மங்கை யோடோது ம்பிலன்னுய். (ககச

வேறு.

பெண்டாசை தவிராமற் பெருவழியிற் போயிருந்து
கண்டாரை வழிபறிக்குங் கள்வனோ வந்தனங்கொண்
டுண்டாரோ நெறியுள்ளா ருரையாயென் றிறையுரைப்ப
வண்டார்பூங் குழலினாண் மணவாள னெடுமுரைப்பாள். (௧௧௫)

ஏதாயென் னன்னையெனக் கிட்டதன மத்தனையும்
போதாம லென்றந்தை பூட்டியபொற் கலன்முழுது
மூதாதை யிட்டபணி முற்றுமிவர் கொள்வரென்றே
னாதாவென் மனமறுகு நானறியே னோர்மாற்றம். (௧௧௬)

வேறு.

என்ற காலையி லீசனை யோங்கினர்
வென்றி வேற்பர காலரோர் வேலினா
லின்று கொன்றதி லென்பய னென்றனர்
நன்று நல்குவ னனென வோதினர். (௧௧௭)

வேலை வைத்தனர் மண்மிசை வேதமு
மோல மிட்டறி யாவொரு மூர்த்தியைக்
கோலெ டுத்தடிப் பேனெனக் கூடினர்
ஞால முண்டவ ராடையை நல்கினர். (௧௧௮)

வேறு.

அந்தண ராடை போட்ட வளவினி லருகு நின்ற
பந்தனை விரலி யாடை பறிக்கிலேம் பார்ப்பா னீயே
தந்தனை யமையும் விட்டோந் தையலுக் காடை மற்றவ்
விந்துவா ணுதலி யிட்ட தனங்கழித் தீவா யென்றார். (௧௧௯)

நல்லதென் றிறைவன் சென்று நான்மறைக் கொழுந்தே யன்ன
மெல்லிய லணிந்து நின்ற மிகுந்தபொற் கலன்கண் முற்று
மொல்லையிற் கழற்றக் கண்ட மங்கையர் கோனு மோங்கு
மல்லிய றோளாய் வாங்கேன் மங்கலி யத்தை யென்றார். (௧௨௦)

பூமகண் மேனி தன்னிற் பூட்டிய தனங்கண் முற்றுந்
தேமலர்க் கையால் வாங்கிச் சீரையிற் றேவ னல்கத்
தாமரைக் கண்ண நீயுஞ் சாத்திய கலன்கண் முற்று
நாமுனைத் தீண்ட வேண்டா நல்குதி விரைவி னென்றார் (௧௨௧)

அப்படிச் செய்வே னென்ன வங்கையி லாழி யன்றித்
தப்பறக் கழித்தன் றீந்தான் கோவணந் தரித்து நின்று
னெப்படிக் கழிப்பே னிந்த வங்குலி யிறுகிற் றென்று
னிப்படிக் கழிப்பே னென்ன வெட்டியங் கையைப் பற்றி. (௧௨௨)

# திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

ஆழிபூண் டிலங்கு நீதி யங்குலி தன்னை நீக்கி
யேழிசை பாடும் வாயா லெடுத்துற மடுத்துப் பல்லாற்
பாழியந் தோளார் வாங்கப் பரமனங் கலிய னோவென்
றாழிவா னவரும் போற்ற வொருகையைத் தலைமேல் வைத்தான்.

திருக்கரம் வைத்த போதுந் தேவனென் றறியார் தொண்டர்
பொருக்கென நெறியை விட்டுப் போவதே கரும மென்ன
விருக்கர னயனுங் காணா விறைவனார் துகிலிற் கூட்டிப்
பெருக்குபல் கலனுங் கட்டி யெடுத்தனர் பெலத்தி னோடும். (கஉச

சுந்தரத் தோளு ளாரத் துகிலிடைத் தனத்தை யேந்த
வந்தரத் தெழுந்தி டாமை கண்டரு ளாலி நாடர்
மந்திர வாதம் பண்ணி வைத்தனை கொல்லோ வென்று
ரிந்திரன் பகையை மாய்த்தான் யானது செய்தே னென்றான். (கஉரு

நன்றதை யெனக்கு மிப்போ நல்குதி நல்கா யாகில்
வென்றிசேர் வாளா லுன்னை வெட்டுவே னென்று நீங்கி
யொன்றிய தடக்கை வாளை யுருவினா ரோங்கக் கண்டு
மன்றல்சேர் துளவத் தாரான் வாளைவை யுரைப்பே னென்றான். (

உரையென வாளை முன்போ லுறையிடைப் பொருந்தப் பூட்டித்
தரைமிசை வைத்துச் சென்றார் தாமரைக் கையா லீச
னிரைகொள்வா னவருங் காண நின்றவர் செவியைப் பற்றிப்
[illegible]பற வெழுத்தோ ரெட்டு முரைத்தனன் பூத நாதன் (கஉஎ

வேறு.

அன்று தானர னாரண னாகிமெய்
குன்றி டாதவண் கூறி யிருந்ததோ
ரொன்றும் வேதனை தீர வுரைத்தனன்
வென்றி வேற்பர காலர்க்கு விண்டுவே. (கஉஅ

வேறு.

பின்ன மற்றமுப் பதமதாய்ப் பிரமனா லரனா
லுன்னு நற்பொரு ளந்ததா யுயிர்பர மருளாய்
வுன்ன மெட்டதா மாத்திரு மந்திரம் வாக்கா
லன்ன மூர்த்தியார் தாதையார் தொண்டருக் களித்தார். (கஉகூ

மின்னை யொத்தபொய் வாழ்வினை விரும்பிநின் றுலகி
லன்னை யத்தனென் றலமரு மல்லலை யறுக்கு
முன்னை நான்மறை முடிவினி லுறைமுதற் பொருளாந்
தன்னை யுள்ளவர் சாற்றினன் றாளியுண் டெமிழ்ந்தாள் (கந0

வேறு.

இந்திரன் போற்ற விமையவர் போற்ற விலங்குசீர் நான்முகன் போற்றச்
சந்திரன் போற்ற வாதவன் போற்றச் சங்கரன் மாதொடும் போற்ற
வந்தரத் தொளிரு நித்தரு மிறைவ னருள்பெறு முத்தரும் போற்ற
மந்திர மாழ்வார் திருச்செவி யுறலும் வையகத் தியற்கையை மறந்தார். ()

சீருறு மிறையைக் கமலையைத் தன்னைச் செறிபெரு மாயையைச் சரணத்
தேர்பெறு நெறியைப் பின்பவி டதனை யின்னுயிர் பெறும்பெரு வாழ்வை
யோரெழுத் திடையே கண்டுநற் றெண்ட ருலையின்வாய் மெழுகென வுருகிப்
பார்மிசை விழுந்து வணங்கின ரணங்கும் ப்ரமனும்படர்விசும்பமைந்தார்

வானிடைக் கருடன் றேண்மிசைத் தோன்றி வளரொளி யாழிசங் கேந்து
மோனரு முத்தர் நித்தரும் வணங்க முளரியு ளயனரன் வணங்கத்
தேனமர் துளவத் தாரினு னின்ற சீர்பெறப் படிமிசைப் பணிந்தார் ௧௩௨/132
தானெழுந்தவரைநோக்கினர் காணார்விசும்பிடைத்தமர்தொழக்கண்டார்.

வேறு.

கண்டனர் விழிக ளாரக் கனகமா மேரு மீதிற்
கொண்டல்வீற் றிருந்தா லென்னக் கொழுஞ்சுடர்க் கருடன் றேண்மே
லண்டமுண் டுமிழ்ந்த சோதி யழகனைத் திருவி னோடுந்
தண்டுழாய் மாலை யானை சரணெனப் பின்னும் வீழ்ந்தார். (௧௩௪) 133

பண்ணுறப் பணிவர் வாயால் வாழ்த்துவ ரழுவர் சோர்வர்
விண்ணுறப் பார்ப்பர் நீதி மெய்யருட் கடலைத் தாந்தங்
கண்ணுற முகப்ப ராடிக் களிப்பர்கை கொட்டிப் பார்ப்ப
ரெண்ணுவர் செய்த தன்மை யிருப்பர்பின் னெழுவர் சொல்வார். (௧௩௫)

நாயினேற் காக மண்ணி னுண்மலர் மங்கை யோடுந்
தூயநின் பத்த ரோடுந் தொன்னெறி யடைந்து நின்ற
மாயனே யுனையெண் ணாதே வழிப்பறி பறித்தே னந்தோ
வேயமர் கோளி யிட்ட கலனையும் வேண்டி னேனே. (௧௩௬)

முடிதுதயள வானோர் போற்று முளரியங் கண்ண வுன்னை
யடிப்பதற் கொருப்பட் டேனே யடியனே னந்தோ வென்பர்
துடிக்கெதி ரிடையா ளஞ்சத் துகளறு மாழி தன்னைக்
கடித்துற வூக்கை வாயால் வாங்கினேன் கண்ண வென்பர். (௧௩௭)

மட்டுவார் துழாயி னானே மதியிலே னுனையும் வாளால்
வெட்டுவா னொருப்பட் டேனே வினையுறு புலைய னேனுந்
தொட்டுவான் றடக்கை பற்றித் துலங்குசீ ராழி கொண்டேன்
முட்டுவன் சிரத்தைக் கல்லின் முடிப்பனென் னுயிரை யென்பர். (௧௩௮)

என்றபற் பலவுஞ் சொல்லி யிரங்கிநின் றழுது சோரும்
வென்றிவேற் பரகா லர்க்கு விமலனு ருரைப்ப ராழ்வீ
ரொன்றுநீ ரிரங்க வேண்டா முமைவிளை யாட்டுக் கொண்டிங்
கின்றுநான் பெற்ற வின்பம் யாவரே பெறுவார் மண்ணில். (௧௩௯)

சீருறு புதல்வ ரற்றூர் செய்தவஞ் செய்து பெற்று
லேர்பெறு மதலை சொல்லு மின்சொலுக் கின்பு றாதே
யாரதை யிகழ்வ ராழ்வீ ரத்திற மன்றோ வின்று
நீரெனிற் செய்த வெல்லா மென்றுபின் னிமலன் கூறும். (௧௪௦)

வேறு.

பூமாதுங் காண வாழி பூட்டுமென் விரலை நீரு
மாமாறும் வாயி லிட்டாங் கதுக்குநீ ரதனை மோந்தேம்
பாமாலை மணத்த தின்று பாடுமென் புகழைப் பாடித்
தேமாலை மார்ப ரேநந் திருவரங் கத்தை யன்னி. (௧௪௧

எனையுமக் குறவாய்க் கூட்டு மேந்திழை குமுத வல்லி
தனையுமெப் போதும் போலத் தாரமா யுவந்து கொண்டு
கனைகடல் சூழ்ந்த மண்ணிற் கண்டவர் தனங்கள் வவ்வி
நினைவிலென் பணிகள் செய்து நின்றுவீ டடைவீ ரென்றான். (௧௪௨

இன்றுமை யுடனே கொண்டேன் னின்பவீ டடைவே னும்மாற்
பொன்றிகழ் புவியோ ருய்யும் பொருட்டினுற் புவியிற் போந்தீர்
நன்றிசேர் பாட்டி னுலிந் நானில முய்யு மாழ்வீ
ரொன்றுநீர் சலிக்க வேண்டா மேகுமென் றுரைத்துப் போனான். (௧௪௩

வேறு.

உருத்திரனு நான்முகனு மும்பர்களு மடிவருட
வருத்திசெய்து திருவருளுந் தனதருளு மாழ்வார்சீர்
கருத்தினுறப் பதிவித்துக் கருடன்மிசை நித்தர்தொழத்
திருத்திகழ்பூந் திருமார்பன் வைகுண்டஞ் சென்றடைந்தான். (௧௪௪

வேறு.

விண்ணிற் றோன்றி யருள்செய்து விமல னேக வவ்வுருவை
நண்ணி யெங்கே காண்பேனென் றிருந்து வருந்தி யெழுந்தவரிம்
மண்ணி னூற்றூ றென்றுமறை வகுத்த பதிகள் வளமோங்க
நண்ணி யுறையுந் திருக்கோலங் கண்டு தீர்வே னெனென்ன. (௧௪௫)

வேறு

மன்றல்கமழ் பசுந்துளப மாமாலைப் பதிதோறுஞ்
சென்றிறைஞ்சிப் பரகாலர் திருவருள்பெற் றனுபவத்தி
லொன்றியசீ ரானந்தக் சுகோததியுள் ளடங்காமற்
குன்றாநற் பாமாலை கூறுதற்கே யொருப்பட்டார். (௧௪௬)

வேறு

ஏார் பெரிய திருமொழியுந் திருத்தாண் டகங்க ளோரிரண்டு
மேரா ரெழுகூற் றிருக்கைதிரு மடலோ ரிரண்டு மின்னிசையாற்
பாரோ ரேத்து மாறங்கம் பரிவாற் பாடிப் பரகாலர்
நாரா யணன்மெய்ப் புகழ்விளக்கி ஞால முழுதும் வாழ்வித்தார். (கசஎ)

வேறு.

பேசரிய பிரபந்த மிருமூன்றும் பிறப்பித்து
மாசிலாக் குமுதவல்லி தன்னொடுமா மாயன்வளர்
தேசுபொலி திருவரங்கஞ் சென்றடைந்தா ரதிலிருந்தாங்
கீசனுக்குக் கைங்கரிய மியற்றுதற்கே யொருப்பட்டு. (கசஅ)

சீராருந் திருவரங்க நகருறையுந் திருத்தொண்ட
ரேராருந் திருமங்கை யாழ்வாரை யெதிர்கொண்டு
பாராரப் பணிந்தனரப் பாகவதர் பதங்களினு
மாராத காதலொடு மாழ்வாரு முறப்பணிந்தார். (கசகூ)

படியுற்ற வைகுந்த மெனமறைகள் பகர்பதியின்
முடிவற்ற சுகோததியின் முழுகியெழு மன்பரொடுங்
கொடிபெற்ற மணிமாட கோபுரத்தைக் கண்ணுறலு
முடியற்ற மரம்போல விழுந்திறைஞ்சி யகங்குழைந்தார். (கரு0)

மாகனகச் செழுஞ்சோதி மணிமாடந் தனில்விசும்பின்
மேகநக மெனச்செறியும் வீதிபல கடந்தசுர
ஞாகநகத் தாலிடந்த வம்மானை யரவணைமேற்
கோகனகச் செழுந்திருவோ டுறக்கண்டார் கும்பிட்டார். (கருக)

வேறு.

வையக மணைத்தும் வயிற்றிலோ ரிட்டதில் வைத்தந்த வயிற்றிடை யுலகிற்
பையர வணைமேல் யோகுசெய் தழகார் பங்கயக் கண்வளர் பரனைப்
பொய்யிலாமெய்யர்வணங்கினர்வணங்கிப்பூமிசைப்பணிந்தெழுந்துருகிக்
கைதலைகுவித்துக் கண்கணீர் சொரியக் கருணைவா ரிதியொடுங் களித்தார். ()

வேறு.

அப்படியே நம்பெருமா ளனுபவத்தின் மடைமாறு
மொப்பரிய பத்தியொடுங் கலிகன்றி யுடனுறைந்து
செப்பரியா னருள்செய்த திருப்பணிமே லொருப்பட்டாங்
கெப்படியே பெருந்தனம்வந் தெய்துமென வெண்ணி. (கருங)

வேறு.

மன்னவர் பொருளும் பௌத்தர்கள் பொருளு மனையிருள் வல்லடிப்பொருளும்
பன்னுபன் முறியாற் கடன்படு பொருளும் பத்தரிற் பெற்றன பொருளு
முன்னுளோர் புவியிற் புதைத்தன பொருளு மூங்கையரந்தர் தம்பொருளுந்
தன்னுற வுடனே கவர்ந்துகொண் டணைந்து தயங்கிரு நான்கு கோபுரமும். ()

திருமதி ளிரண்டுந் திருமடைப் பளியுஞ் சிறந்தவான் மண்டபத் துடனே
பொருவற விரிந்த நெற்குறு சாலை புகலுநெற் களஞ்சியு முதலாய்க்
கருமுகில் வண்ணன் றிருவுள முவப்பக் கட்டினார் வெட்டுவான் றுணிந்து
பெறுவழித் தலையிற் றடக்கைவாள் வலியாற் பின்னைகோன் பெரும்பதம் பெற்றார். ()

சைவரை மாயா வாதியர் தம்மைப் பௌத்தரை யருகரைத் தவமில்
பொய்யரை யுலகா யதர்களை வாமப் புலையரை நிலையிலா நிலைசேர்
கையரைக் கலையால் வாக்கினு லறிவாற் கருதரு மறைமுடி வென்னு
மெய்யினால் வென்று பலபல திருப்பேர் விளம்பிட விளங்கினார் கலியர். ()

வேறு.

அப்படியே விளங்கிடுநா ளரட்டமுக்கி யருண்மாரி யடையார் சீயஞ்
செப்பரிய திருவரங்கத் தம்மானைச் சென்றிறைஞ்சி யொருநாட் செப்பு
மிப்படியி லிருவினையு மடியேற்குத் தொலைந்தவினி யிறைவா நானுன்
னொப்பரிய பரமபத மடையவிடை யருள்கவென்ன வுடையா னென்ன. ()

நின்றுரைத்து விழுந்திறைஞ்சி நெக்குருகி யன்பிலெழு நிகரி லாரைக்
குன்றெடுத்துக் கன்மாரி காத்தபிரா னருள்விழியாற் குளிர நோக்கி
யின்றுநீ கேட்டதற்கு நம்முடைய தெற்குவீ டென்னப் பட்ட
மன்றல்கமழ் பொழில்புடைசூழ் குறுங்குடியில் வருதியென்றான் மாயை வல்லான். ()

அப்பொழுதே கலிகன்றி யணியரங்கத் தம்மானை யலர்மேல் வைகுஞ்
செப்பரிய சீரங்க நாயகியார் முன்னிலையாய்ச் சென்று தாழ்ந்தி
னிப்பொழுதே சரண்புக்கே னென்றிறைஞ்சி நின்றசரா சரங்க ளேத்த
வொப்பரிய பரசமய கோளரிவந் தானென்றுஞ் சூதுஞ் சின்னம். (௧௫௬)

வேறு.

நாலிரு திசையு மண்ணு நாகர்தம் பதியு மெல்லா
மேலுயர் விசும்புங் கேட்ப விரிபொழி லரங்க நீங்கி
மாலிருஞ் சோலை நோக்கி வையக மனைத்து முண்டோ
ராலிலைக் கிடந்த மாய னின்றமெய்ந் நதனைச் சார்ந்தார். (௧௬௦)

வேறு.

அந்தரத்தோர் மலர்மாரி பொழிந்தேத்தி யடிபரவுஞ்
சுந்தரத்தோ ளுடையானைத் தொழுதேத்தி விடைகொண்டிங்
கிந்தமா நிலத்தோர்க்கு மிமையவர்க்கும் பல்லாண்டைத்
தந்தபிரான் கிழியறுத்த தமிழ்மதுரைப் புரஞ்சார்ந்தார். (௧௬௧

பணியணைமேல் வீற்றிருந்து பட்டர்பிரான் றமிழ்க்குருகு
மணிவண்ணர் கழல்வணங்கி மன்னவனும் பின்றொடரக்
கணிகண்ணன் பின்போனான் கண்டுயிலும் புத்தூரை 3
நணியிறைஞ்சி வலஞ்செய்து நான்மறைக்கு மொருவித்தாம். (௧௬௨)

திருமாலை யுறவணங்கிப் பெரியாழ்வார் திருவடியை
யருகாத பேரன்பா லகங்குழைந்து பணிந்தேத்தி
மருவார்பூம் பொழிற்பொருநை வடகரைத்தண் வைகுந்தப் 4
பெருமானெம் மிடர்கடியும் பிரானுரைத் தொழுதேத்தி. (௧௬௩)

கலைபயிலுங் கலிகன்றி காசினிவேந் தைத்தொழுது
தொலைவிலிமங் கலந்தொழுது சொற்குளந்தை நகர்தொழுது
சிலையெடுத்த பிரானிருந்த திருப்பேரை நகர்தொழுது
புலையனே னுயிர்காத்தார் திருக்கோளூர் புக்கிறைஞ்சி. (௧௬௪)

வேறு.

குன்றம்போலு மணிமாட நீடு குருகூர் நகர்புக்கு
நின்ற வாதிப் பிரான்றன்னை நெஞ்சால் வாக்காற் காயத்தா
லன்று நினைத்துத் துதித்திறைஞ்சி யன்பால் வான மாமலையை
யின்று வணங்க வேண்டுமென வெழுந்து சென்றார் கலிகன்றி. (௧௬௫)

வேறு.

ஊனமாம் பிறவி யுததியிற் கிடந்திங் குலைந்தல மந்தற மெலிந்தேன் 13
வானமா மலைகண் டேறினேன் வீடு மற்றெமக் கணித்தெனப் புழுதே
போனகா லங்கட் கிரங்கிய கலிய னுங்கவர் பூங்கழ லிறைஞ்சித்
தேனமாம் பொழில்சூழ் திருக்குறுங் குடிமேற் சிந்தையை விழியொடுஞ் செலுத்தி. ()

ஏறிய சுவிகை வட்டிழிந் தருளி யிருபதம் வருந்திட விரைவா
லாறுசெல் பொழுதி லழகிய நம்பி யாங்குறை பவர்க்கதை யறைய
மாறிலா வனைத்துக் கொத்தும்வந் தெதிர்கொண் டேத்திட மற்றவருடனே
சேறுசெய் குளனூர் கழனிகள் புடைசூழ் திருக்குறுங் குடியினுட் செறிந்தார். (௧௬௭)

திருக்குறுங் குடியிற் செறிந்தமெய்ஞ் ஞானி செழுந்தவரெழுந்தடிவணங்கி
யிருக்கொலிமுழங்குநகர்வலஞ்செய்தாங்கிமையவர் முறைமுறையிறைஞ்ச
விருப்புடன் றிருப்பாற் கடற்புனல் படிந்து மெய்யுறும் பன்னிரு நாமங்
கருத்துற வணிந்து திருமணு மஞ்சட் காப்புடன் கோப்புற வணிந்தே. ()

எண்ணருந் துயத்தை வாக்கினிற் றரித்தாங் கிதயதா மரைமலர் மிசையிற்
கண்ணனைத் திருமா மகளொடு மிருத்திக் கருணையா னந்தநீர் சொரிய
மண்ணவ ரிறைஞ்ச நடந்தவர் தொடர்ந்த வானவ ருலகினு முயரும்
விண்ணளா வோங்கி யிலங்குகோ புரத்தைக் குறுகினர் விரிஞ்சனுந் துதிப்ப.

திரண்டவா னவரு முனிவருந் துதிப்பத் திகழொளிக் கோபுரங் கடந்திங்
கிரண்டுதோ ளகற்றி நான்குதோ ளசிங்கு மிறைதிருக் கோயிலிற் குடபாற்
கரண்டமாடியசீர்ப்பொய்கையின்புடைசூழ்கரும்பணைப்பெரும்பழமுலைந்து
புரண்டுவீழ்வதுவும்வாளைபாய் வதுவு நோக்கினர் புலவர்கள் பெருமான்.

அத்திறங் கண்டு திருவுள முவந்த வாலிநா டுடையவா ரமுத
மித்திருப் பதிநே ரெத்திருப் பதியுண் டிருநிலத் தென்றுநின் றியம்பிப்
பத்தருந் துதிப்ப வலஞ்செய்தாங் கிரந்து பக்கநின் றவர்திற நோக்கிச்
சித்தர்மாமுனிவரிறைஞ்சிடக்கிடந்தசெங்கணாயகன்முனஞ்செறிந்தார். ()

சென்றவர் கிடந்த நம்பியை வணங்கித் திருமகள் பூமியோ டிலங்குங்
குன்றென விருந்த நம்பியைப் பணிந்து கோதிலா வேதங்கள் புகழ
நின்றநம் பியையுஞ் சென்றடி பணிந்தோர் நிலவுசித் திரமென நின்றுங்
கின்றெனக் குரைத்த வின்பவீ டருள்வா யெந்தையென் றிணையடி பிடித்தார். (களஉ,

ஆங்கவர் தம்மை யன்பொடு நோக்கி யழகிய நம்பியன் றருளு
மோங்குநம் மேலை வீடினைக் களிக்கோ மேகுதி யென்றுவந் தருளிப்
பாங்குடன் சிரத்திற் றிருவடி யிரண்டும் பதிந்ததன்ன பத்தரப் பொழுதே
தேங்குநீர் விரசைத் திருநதிப் புனலிற் செறிந்துற வாடியக் கரைமேல். (களங)

தூய்யமாப் பளிங்கு நிறத்தமா னவனு சுடர்விடு சோதியீ ரிரண்டாங்
கைகளாற் றீண்டிப் பரிசனஞ் செய்யக் கடுப்பிணிலொளிக்கொண்டசோதி
மெய்யெடுத் தேகி முத்தியை யடைந்து விளங்குசீ ராலிநா டுடையார்
செய்யவள் கொழுந னடியரோ டிருந்த மாமணி மண்டபஞ் செறிந்தார். (களச)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரண

20764